GOKULAM

கோகுலம்

தூத்துக்குடி மாணவர் ஸ்பெஷல்



“அழகா இருக்கே, தூத்துக்குடி முத்தா?”

ரூ.6/-

டிசம்பர் 2003

UCMAS™
Mental Arithmetic-India

"உங்களுக்குள் ஒளிந்திருக்கும் மேதையை அறிந்து கொள்ளுங்கள்"

உங்கள் குழந்தையின் துல்லியத்தையும் துரிதத்தையும் எமது மனக்கணித பயிற்சி மேம்படுத்துகிறது.



பயிற்சியினால் மேம்படுத்தப்படும்

- வேகம்
- துல்லியம்
- கற்றுக் கொள்ளும் திறன்
- ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை
- கவனிக்கும் திறன்
- பிம்ப நினைவுத் திறன்

யூசிமாஸ் - அபாகஸ் மனக்கணித கல்வியில் இந்தியாவில் முன்னோடி

- உலகத்தின் தலைசிறந்த தத்துவம் தற்போது இந்தியாவில்
- அபாகஸ் மூலம் மனக்கணித பயிற்சி
- முழு மூளை மேம்பாட்டிற்கு
- 4-12 வயது குழந்தைகளுக்காக

இந்தியாவில் மட்டும் **375** மையங்களில் (சென்னையில் மட்டும் 66), சுமார் 25,000 குழந்தைகள் பயின்று வருகின்றார்கள்.

Launching Shortly

U C MAS MEMORY



U C MAS
Memory Technique-India

For all 12 - 20 years old

- Memory Technique
- Mental Mapping
- Speed Reading

மேலும் விபரங்களுக்கு

யூசிமாஸ் மென்டல் அரித்மெடிக் (இந்தியா) பிரைவேட்.லிமிடெட்.,

A1-1857, 13-வது மெயின் ரோடு, 6-வது அவென்யூ, அண்ணாநகர் (மேற்கு) சென்னை - 600 040. இந்தியா.

Tel : 91-44-2618 2396(5 Lines). Fax : 91-44-26180143 / 1706

Email: admin@ucmasindia.com Website: www.ucmasindia.com

National & International franchise enquiries solicited

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர்
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

**Bharathan Publications
Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்






டிசம்பர் 2003 மலர் : 21 இதழ் : 11

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.


மசாலா பாப்கார்ன்

மழைத்துளி என்றில்லை, சாதாரணமாக ஏதாவது தூசியோ, அழுக்கோ சிப்பிக்குள் சென்றுவிட்டால் அதனுடைய மென்மையான உள்ளுறுப்புகளை அந்தத் தூசி உறுத்தத் தொடங்கும். அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, அந்தத் தூசியைச் சுற்றி சிப்பி ஒரு திரவத்தைச் சுரக்கும். அந்தத் திரவம் தான் கெட்டியாகி நாளடைவில் முத்தாகிறது.



- என். ஜரினா பானு, திருப்பட்டினம்.

பாலூட்டி வகையைச் சேர்ந்த முயல்கள் கொறித்துத் தின்பதற்கேற்ப அதன் பற்கள் தேயத் தேய வளர்ந்து கொண்டே இருக்கும். வீட்டில் வளர்க்கும் முயல்கள் 'குழி முயல்கள்' வகையைச் சேர்ந்தவை. இவை வெள்ளை நிறத்தில் இருக்கும். காட்டு முயல்கள் கறுப்பு, சாம்பல் மற்றும் பழுப்பு நிறத்தில் இருக்கும்.



முயல்களுக்கு வைட்டமின் 'பி' சத்தும், அமினோ அமிலங்களும் தேவைப்படுகின்றன. அவற்றின் கழிவுகளிலேயே அத்தகைய சத்துகள் இருப்பதால் முயல்கள் தங்கள் கழிவுகளைத் தின்று விடுகின்றன.


- ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்.



சிறுத்தைப் புலி அதிவேகமாக ஓடும். மணிக்கு 100 கி.மீ வேகத்தில் ஓடும். ஆனால் சில நூறு மீட்டர்களிலேயே களைத்துப் போய் அதன் வேகம் தடைப்பட்டுவிடும். அதேசமயம் புள்ளிமான்கள் 70 கிலோமீட்டர் வேகத்தில் சுமார் ஐந்து முதல் ஆறு கிலோ மீட்டர் தூரம்வரை கூட தொடர்ந்து ஓடக்கூடியவை.

நீர்வாழ் ஜந்துகளில் செயில்ஃபிஷ் எனப்படும் மீன்கள் மணிக்கு 96 கி.மீ வேகத்தில் நீந்தும். இதை அடுத்து டால்ஃபின்கள் கிட்டத்தட்ட 60 கி.மீ வேகத்தில் நீரில் நீந்துகின்றன.

- நாசர், திருப்பட்டினம்.



பூமியில் ஓரிடத்தில் இருந்து நேராக புறப்பட்டுச் சென்று கொண்டே இருக்க வேண்டும். அப்படியே நேராக 40 ஆயிரத்து 77 கிலோமீட்டர் தூரம் சென்றால், மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்ந்து விடலாம். ஆம்! பூமியின் பூமத்தியரேகை வட்டச் சுற்றளவு 40,077 கி.மீ.

- கு. அருணாசலம், தென்காசி.




இங்கிலாந்தின் கொலம்பியாவைச் சேர்ந்த 'க்வாக்யூ' இனப் பழங்குடியினர் தங்கள் பெயரை அடகு வைத்துத்தான் கடன் வாங்குவார்கள். கடனைத் திருப்பித் தரும் வரை பெயர் இல்லாமலே இருப்பார்கள். பெயரை யாராவது கேட்டாலும் சொல்ல மாட்டார்கள்.

- எம். வினோத்



மொசைக் என்னும் ஒரு வகையான கல்லை 500 ஆண்டுகளுக்கு முன்பே சுமேரியர்கள் கண்டு பிடித்திருந்தார்கள். பண்டைய ரோம் நகரின் ஒவ்வொரு மாளிகையும் மொசைக் கற்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. தேவாலயங்களிலுள்ள ஏசுநாதர், தேவதைகள் உருவங்களைச் செய்வதற்கு மொசைக் கற்களையே இத்தாலி, கிரீஸ் ஆகிய நாடுகளில் பயன்படுத்தி வந்தனர்.


- நெ. இராமன், சென்னை.



நம் உடலில் உள்ள பொருட்களைக் கொண்டு பின்வரும் பொருட்களைத் தயாரிக்கலாம். 7 சோப்புக் கட்டிகள் தயாரிக்கத் தேவையான கொழுப்பும், 9000 பென்சில்கள் தயாரிக்கப் போதுமான கரியும், ஓர் ஆணி தயாரிக்கப் போதுமான இரும்பும், 2000 தீக்குச்சிகள் செய்யப் போதுமான பாஸ்பரஸும் நம் உடலில் உள்ளன.




சாதாரண மழைத்துளியின் எடை 0.2 கிராம். ஒரு வினாடிக்கு 13 அடி வேகத்தில் விழுகிறது. பெரிய மழைத் துளியோ வினாடிக்கு 25 அடி வேகத்தில் விழுகிறது. கோடையில் விழும் மழைத் துளிகள், குளிர்ந்த காலத்தில் விழும் மழைத் துளிகளை விட அளவில் பெரியவை.



பிம்பர்னஸ் என்ற மலரை மேல் நாட்டினர் ஏழைகளின் காலக் கண்ணாடி என்பர். சூரிய ஒளி இருக்கும் நாட்களில் இது காலையில் மலர்ந்து பிற்பகலில் மூடிக் கொள்ளும்.

- மு. முகேஷ் கன்னா,
பத்தாம் வகுப்பு,
புனித மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
மில்லர்புரம்,
தூத்துக்குடி.

மின்மினிப் பூச்சியின் தோல் ஒளி புகக்கூடியது. இதன் தோலில் ஒளியை ஏற்படுத்தும் லூசிபெரின் என்ற வேதிப்பொருள் உற்பத்தியாகிறது. இப் பொருளின் பின் புறத்தில் ஒளியை எதிரொளிக்கும் அடர்ந்த திசுக்கள் உள்ளன. இதன் ஒளி ஓர் ஆக்ஸிகரணமேற்ற நிகழ்வாகும். லூசிபெரின் ஆக்ஸிஜனுடன் இணைந்து 'ஆக்ஸிலூசி பெரான்' என்ற பொருளை ஏற்படுத்தும். முற் காலத்தில் சீனா, ஜப்பான், பிரேசில்



முதலிய நாடுகளில் ஏழை மாணவர்கள் இந்தப் பூச்சிகளின் ஒளியில் படித்தனர். பிரேசில் நாட்டில் இப்பூச்சியைத் தலையிலும், கால்களிலும் அலங்காரப் பொருளாகப் பயன்படுத்தினர்.

- எஸ். மோகன்ராஜ், ஒன்பதாம் வகுப்பு,
ச.மு.இ. மேல்நிலைப்பள்ளி,
சீர்காழி.

கிறிஸ்துமஸ் விருந்து!



"கர்த்தர் எந்தன மேய்ப்பர் எனக்கொன்றும் குறைவில்லை..." என்று பாடலைக் கேட்டதும் பிரௌனியும் (குருவி) பிளாக்கியும் (குரங்கு) திரும்பிப் பார்த்தன.


ஸ்வெட்டர், மப்ளருடன் ஜானி (முயல்) உள்ளே நுழைந்தது.

"இந்தக் குளிரிலும் உனக்கு நன்றாகப் பாட வருகிறதே! இந்தச் சூடான பிளாக் டீயைக் குடி" என்றது பிரௌனி.

"கிறிஸ்துமஸ் நெருங்கிக் கொண்டிருக்கிறதே! அதான் பாட்டுப் பாடி பயிற்சி செய்யறேன். பிளாக்கி, இந்தக் கிறிஸ்துமஸை எப்படி கொண்டாடப் போறோம்?" - ஜானி.

"நம்ம மூணு பேர் சம்பாரிச்சு சேர்த்து வச்சப் பணத்துல ஆளுக்கு ஒரு புது டிரெஸ் வாங்கிக்கலாம். மீதி காசுல வயதான ஐந்து பேருக்கு ஸ்வெட்டர், கம்பளி வாங்கிக் கொடுக்கலாம்" என்று தன் திட்டத்தை அறிவித்தது பிளாக்கி.

"கிறிஸ்துமஸ் அன்று காலை, நண்பர்களை அழைத்து பிரேயர் பண்ணிட்டு சாக்லேட் வாங்கிக் கொடுத்துடலாம்" - பிரௌனி



அப்போது சோம்பேறி எலி ஜோன்ஸ் உள்ளே புகுந்து, "பிரௌனி, எனக்கும் கொஞ்சம் டீ கொடு. நானும் உங்கள் பேச்சில் கலந்து கொள்கிறேன்" என்றது.

"டீ வேணா குடி. நாங்க பேசி முடிச்சிட்டோம்" என்று டீயை நீட்டியது பிரௌனி.

"என்ன பேசிட்டீங்க? புதுசா யோசிக்கவே மாட்டீங்களா? இந்தக் கிறிஸ்துமஸுக்குப் பிரியாணி செய்தால் என்ன?" - ஜோன்ஸ்.

பிளாக்கி, பிரௌனி, ஜானி மூன்றும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன.

"என்ன யோசிக்கிறீங்க? நாம நாலு பேரும் ஆளுக்கு ஒரு வேலையைச் செய்வோம். பிரியாணியைச் செய்து நான்கு பங்காக்கி எடுத்துக் கொள்வோம்."

"சரி, ஏதோ உருப்படியா ஒரு யோசனை சொல்லியிருக்கே! யார் யாருக்கு என்ன வேலை?" என்றது பிளாக்கி.

"பிரௌனி, நீ அரிசி கொண்டு வரணும். பிளாக்கி நெய் கொண்டு வரணும். ஜானி காய்கறிகள்..."

"நீ என்ன பண்ணப் போறே?"

அவசரப்படாதே! விறகும், தண்ணீரும் என் பொறுப்பு. ஓ.கேயா?"

"ஓ.கே. குட் நைட்."

கிறிஸ்துமஸ் அன்று அதிகாலையிலேயே குளித்து புத்தாடை அணிந்து கொண்டன. பிரௌனி, பிளாக்கி, ஜானி நண்பர்கள், உறவினர்களுடன் பிரேயரை முடித்துக் கொண்டு, எல்லோருக்கும் சாக்லேட் வழங்கின.



பிரௌனி அரிசியுடன் காத்திருந்தது. பிளாக்கி நெய்யும், ஜானி கேரட், காலிஃபிளவர், பட்டாணி சகிதம் வந்து சேர்ந்தன.

"நேரம் ஆகுது. எங்கே இந்தச் சோம்பேறி ஜோன்ஸ்? விறகும் தண்ணீரும் இருந்தால்தானே சமைக்க முடியும்?"

சிறிது நேரத்தில் வந்த ஜோன்ஸ் "நண்பர்களே, என்னை மன்னியுங்கள். முழங்கால் வலி. அதான் சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியவில்லை."

"பிரௌனி, நீ இந்தச் சாமான்களுக்குக் காவல் இரு. நான் தண்ணீர் கொண்டு வர்றேன். ஜானி விறகு கொண்டு வருவான்" என்று கூறிப் புறப்பட்டது பிளாக்கி.

சற்று நேரத்தில் பிரியாணி செய்யும் வேலை தொடங்கியது. மூன்றும் பேசிக் கொண்டே வேலை செய்தன.

"பிளாக்கி, ரொம்பப் பிரமாதமாகப் பிரியாணி பண்ணியிருக்கே! சூப்பர்."

"வீட்டில் உறவினர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள். அவரவர் பங்கை எடுத்துச் சென்று, கிறிஸ்துமஸ் விருந்து கொடுக்கலாம்" என்றது பிளாக்கி சந்தோஷத்துடன்.

மூன்று பாத்திரங்கள் வந்து சேர்ந்தன.

"பிளாக்கி, நாலு பங்காக வை" என்றது ஜோன்ஸ்.

"சரி. அரிசி கொண்டு வந்த பிரௌனிக்கு ஒரு பங்கு. காய்கறி கொண்டு வந்த ஜானிக்கு ஒரு பங்கு. நெய் கொண்டு வந்த எனக்கு ஒரு பங்கு. மீதி ஒரு பங்கு..."

"எனக்குப் போடு பிளாக்கி."

"தண்ணீரும் விறகும் யார் கொண்டு வந்தது?"

"நீங்கதான்..."

"அப்ப இதை மூணு பங்காக நாங்க பிரிச்சுக்கறதுதானே நியாயம்?"

"நான்தானே ஐடியா கொடுத்தேன்."

"இவ்வளவு நேரம் வாசனைப் பிடிச்சதே ஐடியாவுக்குச் சரியாகப் போச்சு. எந்த வேலையும் செய்யாமல் சாப்பிடணும்னு நினைக்காதே ஜோன்ஸ். அவரவர் உழைப்பிலே சாப்பிடற கூழ் அமிர்தத்திலும் மேலானதுன்னு கர்த்தரே சொல்லியிருக்கார் தெரியுமா?" - பிளாக்கி.


"சாரி பிளாக்கி. நான் வரேன்."

"நீ சோம்பேறியாக இருந்தாலும் எங்கள் நண்பன்தான். இந்தப் பங்கை எடுத்துட்டுப் போ" என்றன மூன்றும் ஒரே குரலில்.

கிறிஸ்துமஸ் தினத்திலிருந்து ஜோன்ஸ் புதுப் பிறவி எடுத்தது.

ஸ்நேகா


புதிர்
கதை: ஆர். சாரதா
படம்: மகேஸ்
மன்னர் மணிமாறன் வேட்டைக்குக் கிளம்பினார். வழியில் —
இந்த வயதிலும் உற்சாகமாக உழைக்கிறீர்கள்! சம்பாத்தியத்தை என்ன பண்ணுகிறீர்கள்?
முருகன் பதில் சொன்னார்.
அருமையான பதில். தங்க நாணயங்களைப் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்.
யாரிடமும் சொல்லாதீர்கள். யாராவது கேட்டால் என் முகத்தை 100 முறை பார்த்த பிறகே பதில் சொல்லலாம்.
மறுநாள் அரசவையில் -
அவையோர்களே, ஒருவன் தன்னுடைய சம்பளத்தில் ஒரு பங்கை உயிர் வாழவும், ஒரு பங்கை எதிர்காலத்தில் திரும்பக் கடனாகப் பெறவும்...
... ஒரு பங்கை கடனைத் தீர்க்கவும், கடைசிப் பங்கை தலை காப்பதற்கும் செலவிடுகிறான். விளக்கம் வேண்டும்.
என்ன ஒரே மௌனம். சரி, இரண்டு நாட்கள் அவகாசம் தருகிறேன்.
இது என்ன புரியாத புதிர்!



அமைச்சருக்குச் சட்டென்று நினைவு வந்தது.
நேற்று மன்னர் ஒரு முதியவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அவரிடம் விடை கிடைக்கலாம்.
அமைச்சர் முருகனைச் சந்தித்து விஷயத்தைக் கூறினார்.
அரசர் முகத்தை 100 முறை பார்த்த பின்தான் பதிலைக் கூற உத்தரவு.
இந்த 100 நாணயங்களைப் பெற்றுக் கொண்டு பதில் சொல்லுங்கள்.
முருகன் விடை கூறினார்.
மறுநாள் அரசவையில் -
மன்னா, என்னிடம் தங்கள் புதிருக்கான விடை உள்ளது.
சொல்லுங்கள் அமைச்சரே!
ஒருவன் தன் சம்பாத்தியத்தில் நான்கில் ஒரு பங்கை உயிர் வாழத் தேவைக்கும், ஒரு பங்கை குழந்தைகளை வளர்த்து படிக்க வைக்கவும் செலவிடுகிறான்.
ம்... அப்புறம்?
பிள்ளைகள் வளர்ந்து பெற்றவர்களைக் காப்பதால் அது திரும்ப வரும் கடன். அவன் தன் பெற்றோருக்குச் செய்யும் கடமைக்கு, தான் பட்ட கடனைத் தீர்ப்பதாகவும் சொல்கிறான்.


மீதி ஒரு பாகம்?
தர்ம காரியங்களுக்குச் செலவழிப்பதால் தர்மம் தலை காக்கும் அல்லவா?
மன்னருக்குச் சந்தேகம் வந்தது.
யாரங்கே? உடனே முருகனை அழைத்து வாருங்கள்.
சிறிது நேரத்தில் -
முருகா எனக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து விட்டீரா?
இல்லை மன்னா. தாங்கள் சொன்னபடி உங்கள் முகத்தை 100 முறை பார்த்த பின்தான் பதில் கூறினேன்.
எப்படி?
இதோ பாருங்கள். இந்த நாணயங்களில் தங்கள் முகம் பொறிக்கப்பட்டுள்ளது.
உன் புத்திசாலித்தனத்தைப் பாராட்டுகிறேன். இதோ என் அன்பளிப்பு.
நன்றி மன்னா.

தேங்காய்க்குள் தண்ணீர் எப்படி வந்தது?





அன்புள்ள ஜக்கு...

● ஆர். திலோத்துமா தேவி, நாகை.

? தேங்காய்க்குள் தண்ணீர் எப்படி உருவாகிறது ஜக்கு?

பொதுவாக எல்லா செல்களும் 90% நீரால் ஆனவை. தேங்காய்க்குள் இருக்கும் தண்ணீர் ஒரு திரவத் திசு. (liquid tissue). இந்தத் திரவத் திசு மாறுதலடைந்து தேங்காயின் முளை சூழ் தசை (endosperm) ஆக மாறுகிறது. இதுதான் நாம் உண்ணும் பகுதி. இந்தப் பகுதியில் தான் பிற்காலத்தில் கரு வளரத் தேவையான உணவுப் பொருள்கள் சேமித்து வைக்கப் பட்டுள்ளன. இளநீர்க் காயில் நீர் அதிகமாக இருக்கும். முற்றிய காயில் நீர் குறைவாக இருக்கும். அதில் உள்ள நீர் endosperm ஆக மாற்றப்பட்டிருக்கும்.

● சின்னஞ்சிறு கோபு, சீனிவாசபுரம்.

? பெரியவர்களுக்கான பத்திரிகைகள் (கல்கி, விகடன் போன்றவை) தீபாவளி மலர் எனத் தனியாகப் புத்தகம் வெளியிடுவது போல் சிறுவர் பத்திரிகை தீபாவளி மலர் வெளியிட்டிருக்கிறதா ஜக்கு?

நான் விசாரித்தவரை சிறுவர் பத்திரிகைகள் தீபாவளி மலர் எனத் தனிப் புத்தகத்தை வெளியிடவில்லை கோபு.



● கே.லோகேஷ், திருப்புவனம்.

? நம் கைரேகைக்கு ஏதாவது பயன் உண்டா ஜக்கு?

கருவிகளைப் பிடித்து வேலை செய்யும் போது ஓர் உறுதித் தன்மையை கைரேகைப் பள்ளங்கள் கொடுக்கின்றன. இதனால் நாம் சுலபமாக வேலை செய்ய முடிகிறது. இல்லாவிட்டால் பிடிமானம் கிடைக்காது.

இது தவிர, கைரேகைகள் தான் தடயவியல் துறையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவுகின்றன. ஒருவரின் கைரேகையைப் போல் இன்னொருவரின் கைரேகை இருக்காது.

● என். மீனாட்சி, கோவை.

? நவரத்தினங்கள் எவை ஜக்கு?

வைரம், வைடூரியம், மரகதம்,

மாணிக்கம், நீலம், புஷ்பராகம், கோமேதகம், முத்து, பவளம் ஆகியவை நவரத்தினங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

- அ.மூர்த்தி, திருநெல்வேலி.

? கோபத்தை அடக்குவது எப்படின்னு கொஞ்சம் சொல்லேன் ஜக்கு?

தேவையான இடத்தில் நியாயமான கோபம் வர வேண்டியது அவசியம். 'ரௌத்திரம் பழகு', 'சிறுமை கண்டு பொங்கு' என்று பெரியோர்களே சொல்லியிருக்கின்றனர்.

தேவையற்ற நேரங்களில் சும்மா, சும்மா கோபித்துக் கொண்டு மற்றவர்களைக் கஷ்டப்படுத்துவது நல்லதல்ல. கோபம் வரும் போது ஒரு தம்ளர் தண்ணீரை மெதுவாகக் குடிக்கலாம். உங்களுக்குத் தெரிந்த பாடல், ஸ்லோகம் அல்லது 1லிருந்து 50வரை சொல்லிப் பார்க்கலாம். இப்படி செய்யும் போது, மனம் அமைதியடைந்து கோபத்தைக் குறைத்துவிடும். செய்து பார்த்துவிட்டு, கடிதம் எழுதுங்கள் மூர்த்தி.

- டி.மாதவன், கருமத்துப்பட்டி

? ஜக்கு, பனம் பழம், பனங்கிழங்கு போன்றவற்றைச் சாப்பிட்டிருக்கியா? உன்னைப் பார்த்தால் சிட்டியிலே பிறந்து, வளர்ந்த மாதிரி இருக்கே! நீ சாப்பிட்டதில்லை என்றால் உனக்கு அனுப்பி வைக்கிறேன் ஜக்கு.

மாதவன், உங்கள் அன்புக்கு ரொம்ப ரொம்ப நன்றி. பனம் பழத்தை ஒரு முறை என் நண்பன் வீட்டில் வேக வைத்து, வெல்லம் போட்டுக் கொடுத்தார்கள், சாப்பிட்டிருக்கிறேன். பனங்கிழங்கை பொங்கல் சீசனில் சாப்பிடுவது வழக்கம். மிக லேசான கசப்புச் சுவையுடைய பனங்கிழங்கு மணத்துடன் சாப்பிட அருமையாக இருக்கும். இங்கும் பனங்கிழங்கு கிடைக்கிறது மாதவன். அதனால் தாங்கள் அனுப்பி வைத்து சிரமப்பட வேண்டாம்.

- பா. நிறைமதி, போளூர்.

? எங்கள் வீட்டில் கோழி வளர்த்து வருகிறோம். கோழிக் குஞ்சு பொரித்த போது வெளியில் இருந்து இரண்டு குஞ்சுகளை வாங்கி அவற்றுடன் சேர்த்து விட்டோம். உருவம், நிறம் எல்லாம் ஒரே மாதிரி இருந்தாலும் தாய்க்கோழி அந்த இரண்டு குஞ்சுகளை மட்டும் சேர்த்துக் கொள்ளாமல் கொத்தி விரட்டியது. கோழிக்கு எப்படி அடையாளம் தெரிகிறதென்று ஆச்சர்யப்பட்டேன் ஜக்கு. நீ என்ன சொல்ற?

நமக்கு வேண்டுமானால் கோழிக் குஞ்சுகளை அடையாளம் காண்பது கஷ்டமாக இருக்கலாம். குஞ்சுகளின் முகத்தோற்ற வேறுபாடு, அவை எழுப்பும் குரல் ஆகியவற்றிலிருந்து, தாய்க் கோழி தன் குஞ்சுகளை அடையாளம் காண்கிறது. பறவைகளுக்குப் பார்வைத் திறன் அதிகம் நிறைமதி.



தவறு என்ன?

-போட்டி முடிவு

நவம்பர் இதழில் 'கதையும் புதிரும்' பகுதியில் படத்தை வெளியிட்டு தவறு என்ன என்பதைக் கண்டுபிடித்து எழுதச் சொன்னோம். நிறையப் பேர் தவறைச் சுட்டிக்காட்டி எழுதியிருந்தனர். அதிலிருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூ. 20/- பரிசு பெறுவோர்:

1. சு. அபிராமி, கீழ்க்கரை, புதுக்கோட்டை மாவட்டம்.
2. பு. வீரமணி, பத்தாம் வகுப்பு, அ.மே. நி.பள்ளி, நல்லூரர்.
3. வே. தரணிகுமார், பன்னிரண்டாம் வகுப்பு, அ.ஆ.மே.நி.பள்ளி, திருக்கழுக்குன்றம்.
4. எம். கார்த்திக், ஏழாம் வகுப்பு, செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு.
5. சபூமா, கும்பகோணம்.



* சானியா

4 தங்கம் வென்றார் சானியா!


முதலாவது ஆப்பிரிக்க-ஆசிய விளையாட்டுப் போட்டி அக்டோபர் 24ம் தேதி ஹைதராபாத்தில் தொடங்கி, எட்டு நாட்கள் நடைபெற்றது. 'இரு கண்டம், ஒரே உணர்வு' என்ற நோக்கத்துடன் 95 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2000 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

பதக்கப் பட்டியலில் சீனா 25 தங்கம், 11 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 41 பதக்கங்களை வென்று, முதல் இடத்தில் உள்ளது. 19 தங்கம், 32 வெள்ளி, 29 வெண்கலம் என மொத்தம் 80 பதக்கங்களைக் குவித்து இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது இந்தியா. 15 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலம் என 23 பதக்கங்களை வென்று ஜப்பான் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. நைஜீரியா, தென்னாப்பிரிக்கா, கொரியா, அல்ஜீரியா, ஒருங்கிணைந்த ஆப்பிரிக்கா - 1, உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்து டாப் - 10 பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட உள்ள இப்போட்டி 2007-ல் எகிப்து, தென்னாப்பிரிக்கா, நைஜீரியா ஆகியவற்றில் ஏதாவது ஒரு நாட்டில் நடைபெறும்.

● ஆப்பிரிக்க - ஆசிய விளையாட்டுப் போட்டியில், டென்னிஸில் மொத்தம் உள்ள 7 பதக்கங்களையும் இந்தியாவே கைப்பற்றிக் கொண்டது. இதில் சானியா மிர்சா 4 தங்கப் பதக்கங்களை அள்ளினார்.

● ஹாக்கியில் இந்தியாவும் பாகிஸ்தானும் இறுதிப் போட்டியில் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முடிவில், இந்தியா 3-1 என்ற கணக்கில் பாகிஸ்தானைத் தோற்கடித்து தங்கப் பதக்கத்தை வென்றது. இந்த ஆண்டு இந்திய அணிக்குக் கிடைத்த நான்காவது வெற்றி இது. இந்த ஆண்டு பாகிஸ்தானுடன் விளையாடிய 8 போட்டிகளில், 5 போட்டிகளை இந்தியா வென்றுள்ளது.



* ரிக்கி பாண்டிங்

இந்தியா - ஆஸ்திரேலியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. வழக்கம் போல் உலக சாம்பியன் ஆஸ்திரேலியா இறுதிப் போட்டிக்குள் நுழைந் துள்ளது.

இந்த ஆண்டின் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற விஸ்டன் விருது, ஆஸ்திரேலிய கேப்டன் ரிக்கி பாண்டிங்குக்குக் கிடைத்துள்ளது. ரிக்கி பாண்டிங் மற்றும் மைக்கேல் பெவன் போஸ்டர், 40-41 ஆம் பக்கங்களில், உங்களுக்காக...

ஓவியப் போட்டி

வயல்வெளிகளில் மஞ்சள் நிறத்தில் பெரிய பூக்களாக மலர்ந்து நிற்கும் சூரியகாந்திப் பூக்களைப் பார்த்திருக்கிறீர்களா? இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: சூரியகாந்திப் பூக்கள். சூரியகாந்திப் பூக்கள் வயல்கள், தொட்டியில், குழந்தையின் கைகளில் என எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி: 5.12.2003



சாத்துக்குடி இளவரசி!

முன்னொரு காலத்தில் வாழ்ந்து வந்த மன்னரொருவருக்குத் திருமணமாகியும் நீண்ட நாட்களாகக் குழந்தை இல்லை. இரண்டாவதாக இன்னொரு திருமணம் செய்துகொண்டபோது, கர்ப்பமுற்ற மனைவிக்குச் சாத்துக்குடிப் பழமொன்று குழந்தையாகப் பிறந்தது. இதனால் ஏமாற்றமடைந்த இளையராணி அரண்மனைக்குள் இருந்த தோட்டத்து மூலையில் அந்தப் பழத்தை வீசியெறிந்தாள். வருடங்கள் பல கழிந்தபோதும் அந்தப் பழம் அழுகாமல் புத்தம் புதிய பழம் போல் அங்கேயே இருந்தது. இளையராணி அந்தப் பக்கமாகப் போகும்போதெல்லாம் அந்தப் பழம் உருண்டு வந்து அவள் காலடியில் முட்டும். ஆனால் அவள் வெறுப்புடன் அதை உதைத்துத் தள்ளுவாள்.

ஒருநாள் பகல் நேரத்தில் அரண்மனைத் தோட்டத்தையொட்டி ஓடிக் கொண்டிருந்த நதிக்கரைப் பக்கமாக அந்தப் பழம் உருண்டோடி தண்ணீரில் விழுந்தது. அந்த நதிக்கரையோரமாகச் சற்று தூரத்தில் அமர்ந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த அயல்நாட்டு மன்னரின் புதல்வன் உதயணன், மிதந்து வந்த பழத்தை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று அந்தப் பழத்திற்



அ.குமார்

குள்ளிருந்து தேவதை போல் ஓர் அழகான பெண் வெளிவருவதைக் கண்டான். சிறிது நேரம் நீந்திக் குளித்த அந்தப் பெண் மீண்டும் பழத்திற்குள் மறைந்து, பழையபடி மிதந்து தன்னுடைய அரண்மனைத் தோட்டத்திற்குள் சென்று மறைந்தாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த உதயணன் தன்னுடைய மனதை அந்தப் பெண்ணிடம் பறிகொடுத்ததோடு, அவளையே திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். உடனே தான் கண்ட சம்பவத்தைத் தன்னுடைய பெற்றோர்களிடம் சொன்னான்.

முதலில் அவன் ஏதோ வேடிக்கையாகச் சொல்கிறான் என்று கருதிய அரசனும் அரசியும், பின்னர் தங்களுடைய தூதுவரை அண்டை நாட்டு மன்னரிடம் அனுப்பினர். விவரங்களைச் சொல்லி, அவர்களிடம் உள்ள சாத்துக்குடிப் பழத்தைத் தங்கள் இளவரசனுக்கு மணமகளாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொண்டார். இதைக் கேட்ட இளையராணி, 'இது என்ன இப்படியொரு குரூரமான வேடிக்கை?' என்று நினைத்து அழத் தொடங்கினாள். அவளைச் சமாதானப் படுத்திய அரசர், நீண்ட யோசனைக்குப் பிறகு அந்தப் பழத்தைக் கொண்டு வரச் சொல்லி, நன்கு கழுவி, ஒரு கூடையில் இட்டு இளவரசனிடம் கொடுக்கும்படி சொல்லியனுப்பினார்.

அந்தப் பழத்தை ஆசையுடன் வாங்கி, தன்னுடைய அறைக்குள் வைத்துக் கொண்டான் உதயணன். ஆனால் அந்த இளவரசி எப்போது, எப்படி வருவாள் என்பது பற்றி அவனுக்குத் தெரியவில்லை. சாப்பிடக் கூட மனமின்றி உணவுகளை அப்படியே வைத்துவிட்டு உறங்கிப் போனான். அந்தச் சமயத்தில் பழத்திலிருந்து வெளி வந்த இளவரசி, அங்கிருந்த உணவுகளைப் பசியாற சாப்பிட்டுவிட்டு மீண்டும் பழத்திற்குள் சென்று மறைந்தாள், எழுந்தவுடன் உணவு மாயமாக மறைந்தது கண்டு ஏதும் புரியாத உதயணன், வருத்தத்துடன் தோட்டத்திற்குள் சென்றான். இப்படியே பல



நாட்கள் கழிந்தன.

ஒருநாள் வயோதிகக் கிழவி ஒருத்தி இளவரசர் வேதனையுடன் இருப்பதைக் கண்டு, அவனுடைய கவலைக்குக் காரணம் கேட்டாள். தான் கண்ட சம்பவத்தையும், அவன் மீது கொண்டுள்ள அன்பினால் பெற்றோர்களிடம் சொல்லி அந்தப் பழத்தை வாங்கி வைத்துள்ளதையும், உணவுப் பண்டங்கள் மறைந்து போவதையும் சொல்லி



டையில் அவள் அதை மறந்துவிட்டாலும் திருமணத்திற்குப் பிறகு தனக்குக் குழந்தையாகப் பிறந்த சாத்துக்குடிப் பழத்தைப் பார்த்த பிறகுதான் முனிவரின் சாபம் நினைவுக்கு வந்திருக்கிறது. இருப்பினும் வெளியில் சொல்ல பயந்துகொண்டு தோட்டத்தில் பழத்தை வீசியெறிந்திருக்கிறாள். இதை நிவர்த்திக்க வழி இருக்கிறது. பயப்படாதே!'' என்று சொல்லி கிழவி மேலும் சொன்னாள்:

''நீங்கள் தேடும் இளவரசி அந்தப் பழத்திற்குள்தான் இருக்கிறாள். இன்றிரவு சிறிய அளவில் நெருப்பு மூட்டி வைத்துக் கொள்ளுங்கள். கூடவே சிறிய பாத்திரமொன்றில் சிறிது தயிரையும் வாழைப்பழத்தையும் கலந்து, உங்கள் படுக்கையறையில் வைத்துக் கொள்ளுங்கள். குறட்டை விட்டுத் தூங்குவது போல் நடியுங்கள். நீங்கள் தூங்குவதாக நினைத்து பழத்திற்குள்ளிருந்து வெளிவரும் இளவரசி உணவைச் சாப்பிட வருவாள். அப்போது சட்டென்று எழுந்து சாத்துக்குடிப் பழத்தை எடுத்து நெருப்பில் போட்டு விடுங்கள். இதனால் அவள் மயக்கமடைந்து விழும்போது, கலந்து வைத்துள்ள தயிரை எடுத்து அவளுடைய தலையில் நன்றாகத் தேய்த்து விடுங்கள். மூர்ச்சை தெளிந்து எழுந்து விடுவாள். பழையபடி இன்றி சுய உருவம் நிரந்தரமாகக் கிடைத்து விடும்.''

வருத்தப்பட்டான். அனைத்தையும் கேட்ட அந்தக் கிழவி சில நிமிடங்கள் சிந்தனைக்குப் பிறகு, ''இளவரசே, கவலைப்படாதீர்கள். உங்களால்தான் அந்த இளவரசிக்கு விமோசனம் கிடைக்கப் போகிறது. நான் சொல்வதைக் கவனமுடன் கேளுங்கள். அந்த இளவரசியின் தாய் சிறுவயதில் தோழிகளுடன் சென்று காட்டில் விளையாடிக் கொண்டிருந்தபோது அங்கிருந்த சாத்துக்குடி மரத்திலிருந்த பழங்களைப் பறிக்க விரும்பினாள்.

''தன்னுடைய கைகளுக்குப் பழங்கள் எட்டாமல் போகவே, அங்கிருந்த புற்று ஒன்றின் மேல் ஏறி நின்று பழத்தைப் பறிக்க முயன்றாள். ஆனால் அந்தப் புற்றுக்குள் இருந்தவர் ஒரு முனிவர். நீண்ட காலமாகத் தவமிருந்தவர் மீது கரையான்கள் புற்றை எழுப்பி இருந்ததால், இவள் ஏறி நின்றதும் மண் சரிந்து, அதனுள் இருந்த முனிவரின் தவம் கலைந்து, அவருடைய கோபத்திற்கு ஆளானாள். உனக்குத் திருமணமாகி பிறக்கும் குழந்தை சாத்துக்குடியாகப் பிறக்கும் என்று சாபம் கொடுக்க, விவரம் புரியாமல் பயந்துபோன அவள், ஓடிச் சென்று தன்னுடைய பெற்றோர்களிடம் நடந்ததைச் சொன்னாள். அவர்கள் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் பேரில், 'பிறக்கப் போகும் குழந்தை சாத்துக்குடி வடிவத்திலேயே இருந்தாலும், முதன்முதலாக அதன் முழு உருவத்தை யார் பார்க்கிறார்களோ, அவர்கள் மூலமாகத்தான் சாபவிமோசனம் கிடைக்கும்' என்று முனிவர் சொல்லிவிட்டார். நாள

அன்றிரவு கிழவி சொன்னபடியே உதயணன் கவனத்துடன் செயல்பட்டு இளவரசியை அடைந்தான். உடனே தன்னுடைய பெற்றோரை அழைத்து நடந்தவற்றைச் சொன்னான். தங்களுடைய அழகிய மருமகளைக் கண்டு ஆச்சரியமடைந்த அரசனும் அரசியும், அவளுடைய பெற்றோர்களுக்குத் தகவல் சொல்லி வரவழைத்தனர்.

அவளைப் பார்த்து வெட்கமடைந்த இளையராணி, தன்னுடைய வாழ்க்கையில் அப்படியொரு சம்பவம் நடந்தது உண்மைதான் என்று சொல்லி அன்புடன் மகளை அணைத்துக் கொண்டாள். சாபம் நீங்கிய இளவரசியை மணம் புரிந்து கொண்டான் உதயணன்!

செய்தித் துளிகள்...


* சந்திரிகா

விண்வெளிச் சாதனை!

விண்வெளி தொழில் நுட்பத்தில் சீனா வியத்தகு முன்னேற்றம் அடைந்து வருகிறது. சீன அரசின் ஒத்துழைப்பால் எதிர் காலத்தில் பல சாதனைகள் நிகழ்த்த உள்ளது சீன விண்வெளித் துறை. 'ஷென் ஷௌ - 5' என்ற விண்கலத்தை யங் லீ என்ற விண்வெளி வீரருடன் சீனா விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. சீன விண்கலம் சர்வதேசத் தரம் கொண்டதாக உள்ளது. உயர்தொழில் நுட்பங்கள் அதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த விண்கலத்தை ஏவியதன் மூலம் சீனா விண்வெளி சகாப்தத்தில் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது. விண்வெளி ஆய்வு நிலையம், ஆய்வுக்கூடம், விண்ணில் நடத்தல் போன்றவை, சீனாவின் எதிர்காலத் திட்டங்கள். 2005 ஆம் ஆண்டுக்குள் சீனா மற்றொரு விண்கலத்தை அனுப்பும் திட்டத்தில் இருக்கிறது.



பற்களால் இழுத்து சாதனை!

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் ரயில் பெட்டிகளைப் பற்களால் இழுத்து உலக சாதனை படைத்தார் வி. இராதா கிருஷ்ணன். 261 டன் எடையுள்ள 6 ரயில் பெட்டிகளை, 4.2 மீட்டர் தொலைவுக்கு தனது பற்களால் இழுத்துச் சென்றார். இதற்கு முன் 1996ஆம் ஆண்டு பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த வார்டர் ஆர்பிப்லி என்பவர், 224 டன் எடையுள்ள 8 ரயில் பெட்டிகளை, 3 மீட்டர் தொலைவு வரை இழுத்துச் சென்றதே இதுவரை உலக சாதனையாக இருந்து வந்தது. தற்போது அது முறியடிக்கப்பட்டுள்ளது.

போனில் செய்தி!

செய்திகளைக் கேட்க டி.வி. ரேடியோ என்று தேட வேண்டியதில்லை. போன் இருந்தால் போதும். 1258 என்ற எண்ணைச் சுழற்றினால், ஆங்கிலச் செய்திகளும், 1259 என்ற எண்ணைச் சுழற்றினால் இந்தி உட்பட மற்ற மொழிகளில் செய்திகளைக் கேட்கலாம். இந்தச் சேவை டில்லி, மும்பை, சென்னை, ஹைதராபாத், பாட்னா ஆகிய நகரங்களில் முதன்முதலாகக் கொண்டு வரப்படுகிறது.

இலங்கையில் எமர்ஜென்சி

இலங்கை அதிபர் சந்திரிகா தேசிய பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தைக் கூட்டினார். இக் கூட்டத்துக்குப் பின் இலங்கையில் அவசர நிலை பிரகடனம் அமலுக்கு வருவதாக அறிவித்துள்ளார்.

சேலம் மாவட்டச் சிறப்பிதழ்


ஜனவரி இதழ் சேலம் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது.

அடுத்தது கரூர் மாவட்டச் சிறப்பிதழ்

கரூர் பள்ளி மாணவ, மாணவியர் தங்களின் படைப்புகளை அனுப்பி வைக்கலாம். கதைகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்கள் மட்டுமின்றி, உங்கள் மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம்.

கடைசித் தேதி 15.12.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.


எத்தனை, எத்தனை?



◯ கார் ◯ பந்து ◯ பொம்மை ◯ கரடி ◯ வீரர் பொம்மை




இரண்டு குழந்தைகள் பொம்மைகளைக் கேட்கின்றனர். கிறிஸ்துமஸ் தாத்தாவிடம் உள்ளதா? ஆம் / இல்லை



மூன்று குழந்தைகள் பந்து கேட்கின்றனர். இங்கே இருக்கிறதா? ஆம் / இல்லை




மூன்று குழந்தைகள் கார் கேட்கின்றனர். இங்கே இருக்கிறதா? ஆம் / இல்லை



இரண்டு குழந்தைகள் கரடி பொம்மை கேட்கின்றனர். இங்கே இருக்கிறதா? ஆம் / இல்லை



நான்கு குழந்தைகள் வீரர் பொம்மைகளைக் கேட்கின்றனர். தேவையான பொம்மைகள் உள்ளனவா? ஆம் /இல்லை



குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்:

1. ________________வை; துணிவு கொள்; வெற்றி நிச்சயம் (5)
6. உயிர்களிடத்தில் ____________ வேண்டும் (3)
11. இதற்கு மயங்காதவர்களே கிடையாது (2)
12. பூமி என்பதை இப்படியும் கூறலாம் (2)
15. கோபம் (3)

வலமிருந்து இடம்:


2. ராமனுக்கு உதவிய வேடர்களின் தலைவன் (3)
4. இதிலிருந்து தான் புதிய செடி முளைக்கும் (2)
5. ____________ நீராடு (2)
10. இந்த ரசம் உடலுக்கு மிகவும் நல்லது (3)
16. ____________ யானையின் கை (5)

மேலிருந்து கீழ்:

1. நதிகளில் ஒன்று (4)
2. குழந்தைகள் விஷமம் செய்வதை இப்படியும் கூறலாம் (4)
8. சத்தம் (2)
9. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் பூ (4)
10. ராசிகளில் ஒன்று (4)
11. ராவணன் ஆண்ட நாடு (4)
13. ____________ம் மருந்தும் மூன்று நாட்கள் (4)
14. வெயிலில் இருந்து தலையைக் காக்க உதவும் (3)

கீழிருந்து மேல்:

3. சிறிய கண்ணாடி பாட்டில் (3)



5. நடனமாடுபவர்களின் காலில் அணியும் ஆபரணம் (4)
6. மூத்த சகோதரன் (4)
7. காய்க்கு அடுத்த நிலை (2)

— ஆர். பெருமாள்,
பதினோராம் வகுப்பு,
வேலம்மாள் சுப்ரமணியம் பள்ளி,
சேலம்

விடை - 22 ஆம் பக்கம்



சங்கிலி யாருடையது?

மாலதி

மைதிலியும், மைத்ரேயியும் அருகருகே வசித்தனர். இருவரும் நெருங்கிய நட்புடன் பழகி வந்தனர். இரவல் கேட்பதும், வாங்குவதும் அவர்களிடையே சகஜமாகி இருந்தது.

மைத்ரேயிக்குக் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையின் பெயர் சூட்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட அவள் குடும்பத்தார் தீர்மானித்தனர்.

மைத்ரேயி, மைதிலி இருவருமே சம அந்தஸ்து உள்ளவர்களாயிருப்பினும் மைதிலி சிக்கனமாய் குடும்பம் நடத்தியதால் அவளால் சேமிக்க முடிந்தது. சேமிப்பில் ஒரு சங்கிலி வாங்கிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

குழந்தை பிறந்ததும் பார்க்க வந்த தோழியிடம் மைத்ரேயி, "எங்கள் வீட்டில் விழா நடக்கப் போகிறது. சொந்தக்காரர்களெல்லாம் வருவாங்க! அத்தனை பேர் கூடுகின்றபோது மூளிக் கழுத்தா இருந்தா இளப்பமா நினைப்பாங்க. கேட்கவே கூச்சமா இருக்கு. நிறைய யோசிச்சுட்டு தான் கேட்கறேன். இல்லைன்னு சொல்லிடாதே! என் கௌரவமே உன் பதில்லேதான் இருக்கு. உன்னோட சங்கிலியை விழா முடிகிறவரை தர முடியுமா? சொந்தக்காரங்க கலைஞ்சதுமே தந்துடறேன். என்னோட சங்கிலியைப் பிள்ளைப் பேற்றுச் செலவுக்காக அடமானம் வைச்சிருக்கறதாலே தான்..." என்று இழுத்தாள்.

"சே... கண்ணைத் துடைச்சுக்கோ! இதுகூடச் செய்ய மாட்டேனா... இந்தா... பத்திரம் எங்க வீட்டுக்காரருக்குக் கூடத் தெரியாமத் தரேன்" என்றபடி இளகிய மனம் கொண்ட மைதிலி சங்கிலியைக் கழற்றித் தோழியின் கழுத்தில் போட்டாள்.

சங்கிலியின் வேலைப்பாடு மைத்ரேயியின் மனதைக் கவர்ந்ததால் அதைத் தன்னிடமே வைத்துக் கொள்ள திட்டமிட்டாள். கணவனிடம் இதைச் சொல்ல அவனும் அதற்கு ஒப்புக்கொண்டான்.

கணவனை அனுப்பி மைதிலி வீட்டிலிருந்து தொட்டில் சங்கிலி வாங்கி வரச் சொன்னாள். அவனும் போய் வாங்கி வந்தான்.

குழந்தையைத் தொட்டிலிலிட்டுப் பெயர்

கூட்டி விருந்திட்டனர். வந்த விருந்தினர்கள் ஒவ்வொருவராய் விடை பெற்றனர். இரண்டு தினங்கள் வரை பொறுமையோடிருந்தாள் மைதிலி.

பிறகு தயக்கத்தோடு மைத்ரேயி வீட்டிற்கு வந்தாள். அவளிடம் ''சங்கிலியைக் கழற்றி வைத்திருக்கிறாயா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்! ரொம்பச் சத்தம் போடுகிறது. அந்தச் சத்தத்தில் குழந்தை பதறிப் பதறி எழுந்திருக்கிறது. அதான் கழற்றி விட்டேன். மத்தியானம் கொடுத்து விடலாமென்றிருந்தேன். இரு. கொண்டு வரச் சொல்கிறேன். என்னங்க... அந்தத் தொட்டில் சங்கிலியை எடுத்துட்டு வர்றீங்களா?'' என்று உட்பக்கம் பார்த்து குரல் கொடுத்தாள்.

"இதோ வரேன்" என்றபடி தொட்டில் சங்கிலியைக் கொண்டு வந்து முன்னே வைத்தான் மைத்ரேயியின் கணவன்.



''இதுக்கென்ன அவசரம்? நான் இதைச் சொல்லலை. கழுத்துச் சங்கிலி. அவர்கூட ஏன் போட்டுக்கலைன்னு கேட்டார். அழுத்திக் கேட்டார்னா வம்பு. தர்றீயா? விழா ரொம்ப அமர்க்களமா நடந்தது''' என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தாள் மைதிலி.

''நீ என்ன சொல்றேன்னே புரியலே! நான்கூட கேட்கணும்னு நினைச்சேன்! உன் கழுத்துலே புதுச் சங்கிலியைக் காணலையே. மெருகு அழிஞ்சிடும்னு கழற்றி வைச்சிருக்கியா?'' என்று அப்பாவி போல் கேட்டாள் மைத்ரேயி.

பகீரென்றது மைதிலிக்கு. 'இவள் என்ன சொல்கிறாள்?'

''விளையாடுகிறாயா? நீதானே வெறுங் கழுத்தாயிருக்குன்னு ஓசி கேட்டே! சீக்கிரம் கொடு. அடுப்பிலே உலை கொதிக்குது'' என்று பொறுமையிழந்து கேட்டாள்.

வார்த்தை வலுத்தது.

மைத்ரேயி மோசம் பண்ணி விட்டாள் என்பதை உணர்ந்ததும் விம்மி விம்மி அழுதாள் மைதிலி. வீட்டுக்கு வந்து கணவனிடம் முறையிட்டாள்.

தங்கச் சங்கிலியை அதுவும் தனக்குத் தெரியாமல் இரவல் கொடுத்ததற்காக

நிறையத் திட்டினான் அவள் கணவன். ஆனாலும் அவள் தூங்காமல், சாப்பிடாமல் சோகமாயிருந்தது அவனுக்குப் பரிதாபமாக இருந்தது.


அது குக்கிராமம். அங்கே பெரிய பண்ணையார்தான் இம் மாதிரி வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார். அவரால் முடியாவிட்டாலே நீதிமன்றம் செல்வர்.

அவரிடம் சென்று மைதிலி தம்பதியர் முறையிட்டனர். அவர் மைத்ரேயி தம்பதியரை அழைத்து விசாரித்தார். விழா அன்று மைத்ரேயி கழுத்தில் புதுச் சங்கிலியைப் பார்த்ததாகப் பலர் சாட்சி கூறினர்.

சிலர் மைதிலி கழுத்திலும் அதைப் பார்த்ததாக வாக்களித்தனர். "ஐயா! ஒரே மாதிரி புடவை, நகை இருப்பது அதிசயமா? இரண்டு பேரும் சினேகிதம் ஆனதாலே ஒரே மாதிரி வாங்கிக் கொண்டோம். இதிலே அவளுடையது தொலைந்து போயிருக்கலாம். அதற்காக என்னுடையதை அபகரிக்கப் பார்க்கிறாளே! அதிலே முகப்பில் என்னுடைய பெயரின் முதல் எழுத்தைப் பொறித்திருக்கிறேன் பாருங்கள்" என்று கோர்வையாகப் பொய் சொன்னாள் மைத்ரேயி. பெரிய பண்ணையார் சங்கிலியை வாங்கிப் பார்த்தார்.

இடி விழுந்தது போல் திகைத்து நின்றாள் மைதிலி. "ஐயா, அது என் பெயரின் முதல் எழுத்து" என்று தீனமாகச் சொன்னாள் மைதிலி.

பண்ணையாருக்குக் குழப்பமாயிருந்தது. எது நிஜம்? இரு குடும்பத்தினரையும் ஒரு வாரம் கழித்து வரச் சொன்னார். வரும்போது ஆளுக்கொரு பொற்கொல்லரை அழைத்து வரும்படி கூறினார். அதுவரை சங்கிலி தன்னிடம் இருக்கட்டும் என்று சொல்லி விட்டார்.



ஒரு வாரம் சென்றது. வழக்கின் முடிவைக் காண ஊரே கூடியிருந்தது. ஆளுக்கொரு பொற்கொல்லரை அழைத்து வந்திருந்தனர். பண்ணையாரும் ஒரு தட்டாரைக் கூட்டி வந்திருந்தார்.

"இந்தச் சங்கிலியின் மாற்று எத்தனை?" என்று இருவரையும் கேட்டார். இருவருமே "22 காரட்" என்றனர்.

முதலில் தனது தட்டாரை 'மாற்று எவ்வளவு' என்று உரைத்துப் பார்க்கச் சொன்னார். அவன் நெடுநேரமாக உரைத்துக் கொண்டிருந்தான்.

மைதிலியின் கணவனுக்குக் கோபம் வந்தது.

"என்னய்யா இது! உரைத்தே அரைப் பவுனைக் கரைத்து விடுவாய் போலிருக்

கிறதே!'' என்று எரிந்து விழுந்தான்.

''உரைச்சுப் பார்த்தால் தானே இது பித்தளைன்னு தெரியுது?'' என்றார் பொற் கொல்லர்.

''அடப்பாவி! எங்க சங்கிலியை விற்றாயா? அடமானம் வைத்திருக்கிறாயா? இப்படி ஏமாத்திட்டியே'' என்று மைத்ரேயியின் கணவன் சட்டையைப் பிடித்து உலுக்கினான் மைதிலியின் கணவன்.

விலக்க முனைந்தவர்களைப் பேசாதிருக்குமாறு சைகை காட்டினார் பெரிய பண்ணையார்.


''அடச் சீ! கையை எடு! வறட்டு ஜம்பம்... பித்தளை நகைக்கு கில்டு கொடுத்து பொண்டாட்டி கழுத்திலே போட்டிருக்கியே! இவ ஒரு முட்டாள்! பித்தளைக்கும், தங்கத்துக்கும் அடையாளம் தெரியாம அதை ஓசி வாங்கியிருக்கா, பார்'' என்று முறைத்தான் மைத்ரேயியின் கணவன்.

''இப்படியெல்லாம் பிலுக்குவான்னு கண்டேனா? தண்ணி படாம வெளியிலே வர்றப்போ மாட்டிட்டு அலைஞ்சிருக்கா'' என்று அழகு காட்டினாள் மைத்ரேயி.

பண்ணையார் உரத்த குரலில் ''இரண்டு பேரும் விலகி நில்லுங்கள். அம்மா மைதிலி, உன் சங்கிலி துளிக் கூடத் தேயாமல் இதோ இருக்கிறது. வந்து வாங்கிக் கொள். உரைத்துப் பார்த்தது நான் செய்தது. அதற்குத்தான் ஒரு வாரம் அவகாசம் கேட்டேன். அதற்குள் உன் கணவன் நான் சங்கிலியைத் திருப்பித் தருவேனா என்று சந்தேகமாகப் பார்த்தான். உரிமையுள்ளவர்களுக்கு மட்டுமே இந்த மாதிரியான பயங்கள் வரும்'' என்றார்.

மைதிலி நன்றியோடு சங்கிலியைப் பெற்றுக் கொண்டாள். ''அடுத்தபடி யாரை ஏமாத்துவோமின்னு யோசிக்காம, சிக்கனமா இருந்து சேமியுங்க! ஒருத்தர்கூட ஒரு பொருளையும் இனிமேல் ஓசி தர மாட்டாங்க! ஆடம்பரமா விழா கொண்டாடுகிறதை விட கௌரவமா வாழ்கிறது உசத்தி இல்லையா?'' என்று பண்ணையார் சொல்ல மைத்ரேயி தம்பதியர் த்லை கவிழ்ந்தனர்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 ந	ம்	பி	க்	கை		ன்	க	2 கு
ர்		ப்		ங்		ண		று
ம		3 கு		ல		ண்		ம்
தை	4 வி		ணி	5 ச		6 அ	ன்	பு
			7 க		8 ஓ			
9 கு	ள	10 மி		11 இ	சை		12 பு	13 வி
றி		து		ல		14 தொ		ரு
ஞ்		ன		ங்		ப்		ந்
15 சி	ன	ம்		கை	க்	பி	ம்	16 து



I. கந்தன் 1000 ரூபாயோடு சந்தைக்குப் போனான். அங்கே அரிசி மூட்டைகளும், பருப்பு மூட்டைகளும், உமி மூட்டைகளும் வாங்கினான்.

அரிசி மூட்டையின் விலை ஒன்று ரூ.100/-
பருப்பு மூட்டையின் விலை இரண்டு ரூ.60/-
உமி மூட்டையின் விலை மூன்று ரூ. 15/-

சிறிது நேரத்தில் அவன் கொண்டு வந்த 1000 ரூபாயும் செலவாகி விட்டது. 1000 ரூபாய் கொடுத்து தான் வாங்கிய மூட்டைகளை எண்ணிப் பார்த்தான். மொத்தம் 100 மூட்டைகள் இருந்தன. கந்தன் வாங்கிய 100 மூட்டைகளில் அரிசி மூட்டை எத்தனை? பருப்பு மூட்டை எத்தனை? உமி மூட்டை எத்தனை?

— ஆர். பிரசன்னா
கரூர்

II. கீதாவிடம் சிறிது பணம் இருந்தது. அதில் இரண்டில் ஒரு பாகம் வாடகைக்கும், கால் பாகம் மளிகை சாமான்களுக்கும், எட்டில் ஒரு பாகம் மின்சாரக் கட்டணத்திற்கும், ஒன்பதில் ஒரு பாகம் மருந்துகளுக்கும் செலவானது. செலவெல்லாம் போக கீதாவிடம் 50 ரூபாய் மீதியிருந்தது. அப்படியானால் கீதாவிடம் முதலில் இருந்த தொகை எவ்வளவு?

— எஸ். ராஜம்
கரூர்

III. 1. 'வியாபாரத் தலை நகரம்' என்று அழைக்கப்படுவது _______.

2. 'புயலடிக்கும் நகரம்' என்று அழைக்கப்படுவது _______.

3. வெள்ளை நகரம்' என்று அழைக்கப்படுவது _______.

4. 'கருங்கல் நகரம்' என்று அழைக்கப்படுவது _______.

5. 'மாடிக் கட்டட நகரம்' என்று அழைக்கப்படுவது _______.

6. 'கனவுக் கோபுர நகரம்' என்று அழைக்கப்படுவது_______.

7. 'அரண்மனை நகரம்' என்று அழைக்கப்படுவது _______.



8. 'பொற்கதவு நகரம்' என்று அழைக்கப்படுவது_______.

9. 'தென்னுலக பிரிட்டன்' நகரம் என்று அழைக்கப்படுவது_______.

10. 'கோவில் நகரம்' என்று அழைக்கப்படுவது_______.


— சிவ. மணவழகி
திருச்சிற்றம்பலம்

IV. அந்த மனிதரிடம் அவரது வயதைக் கேட்டால் நேராகச் சொல்ல மாட்டார். "என் வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் 9 வரும். அந்த இரு எண்களையும் இடம் மாற்றிப் போட்டால் என் வயதில் ஒன்பது கூடிவிடும்" என்பார். அப்படியானால் அவர் வயது என்ன?

V. சில பெண்கள் கடைக்குச் சென்றனர். ஒவ்வொருவரும் ஒரே தொகைக்குப் பொருள்களை வாங்கினர். அவர்கள் செலவழித்த மொத்தத் தொகை 203 ரூபாய். எந்தப் பொருளும் 10 ரூபாய்க்குக் குறைந்தது கிடையாது. அப்படியானால் அந்தப் பெண்கள் மொத்தம் எத்தனை பேர்? பொருளின் விலை என்ன?

— என். ஜரினா பானு
திருப்பட்டினம்

VI. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் 10 கட்டங்களில் 11 முதல் 20 வரை உள்ள எண்களை ஆங்காங்கே நிரப்பி நேர் நேர் வரிசையில் கூட்டினால் விடை 61 வர வேண்டும். எங்கே கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!





— செ. சுபா, ஒன்பதாம் வகுப்பு,
உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை

VII. எங்கள் வீட்டில் நான் 30 தோசைகள் செய்தேன். அன்று எங்கள் வீட்டிற்கு 30 விருந்தாளிகள் வந்து விட்டார்கள். உடனே என் அம்மா என்னிடம் "ஆண்களுக்கு 2 தோசை, பெண்களுக்கு ஒரு தோசை, குழந்தைகளுக்கு ½ தோசை வீதம் கொடுத்தால் தோசையும், வந்த விருந்தாளிகள் எண்ணிக்கையும் சமமாக இருக்க வேண்டும். மேலும் எத்தனை ஆண், பெண், குழந்தை எனவும் கணக்கிட வேண்டும்" என்று சொன்னார். எனக்குக் கொஞ்சம் உதவி பண்ணுங்களேன் ப்ளீஸ்!..

— வே. சுபஸ்ரீ,
வந்தவாசி

VIII. கீழே உள்ள கட்டத்தைப் பாருங்கள். இதை எந்தப் பக்கம் எந்த எண்ணைப் போட்டுக் கூட்டினாலும் விடை 34 வரவேண்டும்.

— வி. சுபாஷினி, ஏழாம் வகுப்பு,
அ.மே.நி. பள்ளி, நல்லூர்

1			4
	6	7	
	10	11	
13			16

விடைகள்

I. 5 அரிசி மூட்டைகள் = 500
1 பருப்பு மூட்டை = 30
94 உமி மூட்டைகள் = 470
100 ரூ. = 1000

II. ரூ. 3600

III. 1. கொல்கத்தா
2.சிகாகோ 3. பெல்கிரேடு 4. அபர்தீன் 5. நியூயார்க் 6. ஆக்ஸ் போர்டு 7. கொல்கத்தா 8. சான்பிரான் சிஸ்கோ 9. நியூசிலாந்து 10. காஞ்சிபுரம்

IV. 45. இவ்விரு எண்களையும் கூட்டினால் வரும் தொகை 9. திருப்பிப் போட்டால் 54. 54க்கும், 45க்கும் உள்ள வித்தியாசம் 9.

V. 7 பெண்கள்; 29 ரூபாய்
ரூ. 203 மீதம் வராமல் வகுக்கும் இரண்டு இலக்க எண் எது என்று கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில் எந்தப் பொருளும் 10 ரூபாய்க்குக் குறைந்தது கிடையாது என்பதால் 7 × 29 = 203

VI.

			11
			17
			20
15	14	19	13
12			
18			
16			

VII.
ஆண் : 5×2 = 10
பெண் : 15×1 = 15
குழந்தை : 10×½ = 5
30 = 30

VIII.

1	15	14	4
12	6	7	9
8	10	11	5
13	3	2	16




தூத்துக்குடி ஸ்பெஷல்



தூத்துக்குடி மாவட்டம் பல பெருமைகளைத் தன்னகத்தே கொண்டது. அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து வீறு கொண்டு எழுந்து, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களைத் தந்த பெருமை படைத்தது இம் மாவட்டம்.

அன்று தொட்டு இன்று வரை நாட்டின் தொழில் வளத்திற்கு வழி வகுக்கும் பல்வேறு தொழிற்சாலைகளை உடையதும் இம் மாவட்டமே. விலை மதிப்பில்லா முத்துகள் கிடைப்பதும், உணவிற்குச் சுவை சேர்க்கும் உப்பு விளையும் உப்பளங்கள் இருப்பதும் இங்கே தான். இவ்வாறு பல துறைகளிலும் பெருமை படைத்தது தூத்துக்குடி மாவட்டம். இம் மாவட்டம் அருள் சார்ந்த ஆன்மிகத் துறையிலும் தன் பங்களிப்பைச் செவ்வனே செய்துள்ளது. இறையருள் வேண்டி நிற்கும் மக்களுக்குத் தெள்ளு தமிழில் பல்வேறு நூல்களை அருளிச் செய்து, ஆன்மிக நல்வழி காட்டிய அருளாளர் குமரகுருபர சுவாமிகள் திரு அவதாரம் செய்ததும் தூத்துக்குடியில் தான்.



முத்து நகரின் முத்தான துறைமுகம், 'திரை கடல் ஓடியும் திரவியம் தேடு' என்று கடல் கடந்து வாணிபம் செய்வதை ஆதரித்து வளர்த்து வருவது. எத்தனையோ, மன்னர்கள் தங்கள் கடற்படை கொண்டு அண்டை நாடு



களைப் போரிலே வென்ற பெருமை படைத்தது அன்றைய தமிழகம். அதற்குச் சற்றும் குறையாமல் உலகத்து நாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டு இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவுவன இன்றைய துறைமுகங்கள். அவற்றுள் இந்தியாவின் தென்கோடி நுழைவு வாயில் என்று அழைக்கப்படும் பெருமை பெற்றது தூத்துக்குடித் துறைமுகம்.

- ஏ. சுபபிரகாஷ், ஏழாம் வகுப்பு,
ஏ.பி.சி. வீரபாகு மெட்ரிகுலேஷன்
மேல் நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.



மக்ரூன்

தூத்துக்குடி என்றாலே நினைவுக்கு வருவது முத்து ஆகும். அதுபோல தூத்துக்குடியின் பெருமையை வெளிநாடு, உள்நாடு என்று அனைத்திலும் உயர்த்துவது மக்ரூன்.

மக்ரூன் என்றாலே நாவினில் நீர் ஊறும். நாக்கில் வைத்தால் கரைந்து அருமையான சுவை தரக்கூடியது. முந்திரியைப் பிரதானமாக வைத்து செய்யப்படும் சங்கு வடிவிலான பிஸ்கட் மக்ரூன்.

- இரா. வினுஷா, எட்டாம் வகுப்பு,
முத்துமாலை அம்மன் அரசு
மே.நி.பள்ளி,
சிறுத்தொண்டநல்லூர்,
தூத்துக்குடி மாவட்டம்.

திருச்செந்தூர்

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர் முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாக உள்ளது.

அகத்தியர், அப்பர், அருணகிரிநாதர், ஆதிசங்கரர், பகழிக்கூத்தர், குமரகுருபரர் ஆகியோர் அருள்பெற்ற தொன்மையான தலம் இது.

'சீர்கெழு செந்தில்' என சிலப்பதிகாரமும், 'திருமணி விளக்கின் அலைவாய்' என அக நானூறும் செந்தூருக்குப் புகழாரம் சூட்டியுள்ளன.

இங்கு ஆவணித் திருவிழா, மாசித் திருவிழா, கந்த சஷ்டி திருவிழா, வைகாசி விசாகம் ஆகிய விழாக்கள் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன.

திருச்செந்தூரில் தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனர் நிர்வாகத்தில் கலைக்கல்லூரி, பெண்கள் கல்லூரி, பொறியியல் கல்லூரி, உடல் கல்வியல் கல்லூரி ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன.


திருச்செந்தூர் அருகில் தாரங்கதாரா கெமிக்கல் வொர்க்ஸ் எனும் இரசாயனத் தொழிற்சாலை சாகுபுரத்தில் இயங்கி வருகிறது.

திருச்செந்தூர் அருகில் தூத்துக்குடி மாவட்டத்தில் நவதிருப்பதி கோயில்கள் வைணவர்களின் புனித ஸ்தலமாக இருக்கின்றன.

- க. அரவிந்த், எட்டாம் வகுப்பு,
கமலாவதி மேல்நிலைப்பள்ளி,
சாகுபுரம்.



குருடர் போல விழிக்கிறோம்!



இப்பொழுதெல்லாம்
தங்கத்தைக்கூட
விலை கொடுத்தால்
வாங்கி விடலாம்...!
ஆனால்
தண்ணீரை...?

ஏரி குளங்களின்
ஆழங்களெல்லாம்
இப்பொழுது
அளக்காமலே
காண முடிகிறது...

நீரின்றிப் போனதால்
வாழ வழியின்றி
பல ஜீவன் மடிகிறது...

ஆறுகளில்
தண்ணீரில்லை என
யாரும்
கவலைப்பட்டதாகத்
தெரியவில்லை...
மண் வியாபாரம் அங்கு
மகத்தாய் நடக்கிறது...

பூமியெல்லாம்
காய்ந்து போன
பிறகும்கூட பல
போர்வெல்களைப்
போட்டு
அதைக்
காயப்படுத்திக்
கொண்டுதான்
இருக்கிறோம்...

மொட்டை
அடித்தால்கூட
தலை சுடுமென்று
தொப்பி தேடுகிறோம்...
பூமிக்குச்
சட்டையாக நின்ற
மரங்களையெல்லாம்
வெட்டும்போது மட்டும்
அதை
மறந்து போனோம்...

தவறுகள் பல
செய்துவிட்டுப்
பருவங்களைப்
பழிக்கிறோம்...!
பஞ்சம் வந்த பிறகே
செய்வதறியாது
குருடர் போல
விழிக்கிறோம்...!

காசு பணம்
சேர்த்து வைக்க
வீட்டுக் கொரு
பெட்டி இருக்கிறதே -
அது போல
கான மழை நீரைத்
தேக்கி வைக்க ஒரு
தொட்டி இருக்கிறதா?

- ராஜதுரை செல்வன்,
பதினோராம் வகுப்பு,
ஆர்.சி.சூசை
மேல்நிலைப்பள்ளி,
கழுகுமலை

பொது அறிவு

1. 1992ம் ஆண்டிற்கான 'துரோணாச்சாரியார் விருது' பெற்றவர்- ஜோகிந்தர்சிங் சைனி
2. முதலாம் உலகப் போரில் உயிரிழந்த இந்திய ராணுவ வீரர்களின் எண்ணிக்கை- 90 ஆயிரம் பேர்.

- ரா. மரிய ராஜாத்தி, ஒன்பதாம் வகுப்பு,
பார்வதி உயர்நிலைப்பள்ளி, இலுப்பையூரணி,
தூத்துக்குடி.

தூத்துக்குடி ஸ்பெஷல்

ஒவியக் கூடம்




சே. ஷெரில் வியோன்சியா,
பதினோராம் வகுப்பு,
காரப்பேட்டை நாடார்
பெ.மே.நி.பள்ளி, தூத்துக்குடி.



ஆர். லோகேஷ்,
பத்தாம் வகுப்பு,
ஆர்.சி. சூசை மே.நி.பள்ளி,
கழுகுமலை




ஆர். தங்கையா, பத்தாம் வகுப்பு,
ஆர்.சி.சூசை மே.நி.பள்ளி, கழுகுமலை.




ஏ. சாந்தி,
ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ விவேகானந்தா
மெட்ரிக் பள்ளி,
தூத்துக்குடி.

சுபபிரகாஷ்,
ஏழாம் வகுப்பு,
ஏ.பி.சி. வீரபாகு
மெட்ரிக் பள்ளி,
தூத்துக்குடி.



டி. பிரவீண், ஒன்பதாம் வகுப்பு,
ஆர்.சி.சூசை மே.நி.பள்ளி, கழுகுமலை.



தூத்துக்குடி ஸ்பெஷல்

தங்கப் பல்!



முத்து ஓர் உப்பு வியாபாரி. நகரத்திற்குச் சென்று உப்பு விற்று வருவான். வீணான பெருமை அவனுக்கு உண்டு. தன்னைச் செல்வந்தனாகக் காட்டிக் கொள்ள முயற்சிப்பான்.

'ம்! இப்ப கொஞ்சம் பணம் இருக்கு. அதுல என்ன செய்யலாம்? சங்கிலி செய்து கொண்டால் சட்டை மறைத்து விடுமே! சரி, ஒரு மோதிரம் வாங்கிக்கிறேன். அப்பத்தான் கையிலே மோதிரத்தைப் போட்டுக் கொண்டு நான் உப்பை அளந்து போடுகையில் எல்லாரும் கவனிப்பாங்க. விசாரிப்பாங்க, பெருமையா இருக்கும்' என்று கற்பனையில் மிதந்து வந்த முத்து பாதையிலே கிடந்த கல்லைக் கவனிக்கவில்லை. கல் தடுக்கி தலை குப்புற கீழே விழுந்தான். முகத்தில் நல்ல அடி. முன் பற்கள் இரண்டு உடைந்து போயின.

''ஐயையோ! உப்பெல்லாம் கொட்டிப் போச்சே! பல்லு வேற உடைந்து போச்சே! என்ன செய்யறது? மருத்துவரைத்தான் பார்க்க வேண்டும்.''

மருத்துவமனைக்குச் சென்று வைத்தியம் செய்து கொண்டான். மீதமுள்ள பணத்தில் இரண்டு தங்கப் பற்கள் செய்து கட்டிக் கொண்டான். உடம்பு சரியானதும் மீண்டும் வியாபாரத்துக்குப் போனான்.

''என்ன இது! என் தங்கப் பற்களை யாரும் பார்க்கவே மாட்டேங்கிறாங்க. உப்பு! உப்புன்னு சொன்னா பல்லு வெளியே தெரியமாட்டேங்குதுல்ல அதான். நாளைக்கு வேறதான் விக்கணும்.''

மறுநாள், முத்து இஞ்சி மற்றும் மஞ்சள் வாங்கிக் கொண்டு போனான். சந்தையில் அவன், ''இஞ்சி வாங்குங்க! மஞ்சள் வாங்குங்க!'' என்று கூவும்போது பற்கள் வெளியே தெரிந்தன. எல்லோரும் விசாரிக்க அவனுக்கு ஏக பெருமை. வியாபாரம் முடித்து திரும்பி வரும்பொழுது மூன்று திருடர்கள் அவனைப் பிடித்துக் கொண்டனர். முத்துவின் ஆடம்பரமான உடையைப் பார்த்து, இவன் பெரிய பணக்காரனாக இருப்பான் என்று நினைத்து அவனைத் தனி இடத்துக்குத் தள்ளிக் கொண்டு

தூத்துக்குடி ஸ்பெஷல்

போனார்கள். அவனிடம் கொஞ்சம் பணம் மட்டும் இருப்பதைப் பார்த்து அவர்களுக்குக் கோபம் வந்தது.

"ஏண்டா! பார்க்கப் பெரிய பணக்காரன் மாதிரி இருக்கே. கொஞ்சம் பணம் வச்சிருக்கே. பணத்தை எங்கே ஒளிச்சு வச்சிருக்கே சொல்லு?" என்று மிரட்டினார்கள்.

முத்து ஒன்றும் பேசாமல் இருந்தான்.

"என்னடா வியாபாரம் செய்யறே?"

"இஞ்சி, மஞ்சள் வியாபாரம் செய்யறேன்."

"இங்கப் பாருடா தங்கப் பல்" என்று ஓங்கி முத்துவின் கன்னத்தில் அறைய, தங்கப் பற்களுடன் சேர்ந்து முன் பல் ஆறும் வெளியே விழுந்தன.

"இன்னும் என்ன, எங்க எங்க ஒளிச்சு வச்சிருக்கே சொல்லு?"

முத்துவை உதைத்தனர். அவனிடம் வேறு எதுவும் இல்லை என்று தெரிந்ததும், மேலும் நாலு அடி போட்டு விட்டு, பணத்தையும் பற்களையும் எடுத்துக் கொண்டு போனார்கள்.

"ஐயோ! வீண் பெருமைக்கு ஆசைப் பட்டு இருக்கிறதையும் இழந்துட்டு, அடி வேற வாங்கிட்டேனே. இனிமேல் வீண் ஆடம்பரம் செய்யக் கூடாது" என்று முடிவெடுத்தான் முத்து.

- எஸ். சௌம்யாயனி,
பத்தாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் ம.மே.பள்ளி,
தூத்துக்குடி




"வெள்ளைக் கோழிக்கும் கறுப்புக் கோழிக்கும் என்ன ஒற்றுமை?"

"இரண்டுமே வெள்ளை முட்டைதான் போடும்."

- தி. டெய்சிராணி,
பத்தாம் வகுப்பு,
பார்வதி உயர்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி

நம்பிக்கை என்ற ஏணி...




கண் இமைக்கும் நேரத்தில்
கண்களை மூடி
கனவு காணத் தொடங்கு.
காலம் நெருங்கி வரும் வேளையில்
கடுமையாக உழைக்க
வேண்டும்.
வான் உயரும் அளவுக்கு இலட்சியம்
இருப்பினும்
வாடிப் போகாமல் முயற்சி செய்ய வேண்டும்.
நாம் அடைய விரும்பும் இலட்சியத்திற்காக
நாளெல்லாம் பாடுபட வேண்டும்.
நான் உயர வேண்டும் என்ற எண்ணமும்
நம்பிக்கை என்னும் ஏணியும் நம்மிடம்
இருக்க வேண்டும்.

- ஆர். உமா மகேஸ்வரி,
தூத்துக்குடி.

அட்டையில்: சிந்துஜா, இந்துஜா
வண்ணப்படம் : ஸ்ரீஹரி

பாசக்கயிறு



தூத்துக்குடி கடலில் விளையும் முத்துகள் சிறப்பானவை. எனவே 'முத்து நகர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கிறோம்.

தற்போது உள்ள விஞ்ஞான வளர்ச்சி வருவதற்கு முன்பாக தூத்துக்குடியில் ஆண்டின் குறிப்பிட்ட காலங்களில் கடலின் அடியில் விளையும் முத்துகளை மூழ்கி எடுப்பது வழக்கம்.

கடலில் மூழ்கி, முத்து எடுப்பவர் இடுப்பில் ஒரு கயிறு கட்டப்படும். அக் கயிற்றைத் தோணியில் இருப்பவர் பிடித்துக் கொண்டு இருப்பார்.

முத்து சேகரித்தாலும் சேகரிக்கா விட்டாலும், அல்லது மூச்சை குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் அடக்க முடியாத சமயத்தில், கடலில் மூழ்கி இருப்பவர் இடுப்பில் கட்டப்பட்டு இருக்கும் கயிற்றை ஆட்டி அடையாளம் செய்வார். உடனே தோணியில் கயிற்றைப் பிடித்து இருப்பவர் கயிற்றை மேல் இழுத்து, கடலின் அடியில் முத்து சேகரிப்பவருக்கு உதவி செய்வார்.

இவ்வாறு கயிற்றை இழுப்பவர் கடலின் அடியில் முத்து சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் மனைவியின் உடன் பிறந்த சகோதரர் ஆகத்தான் இருப்பார். தன் சகோதரியைப் பாதுகாக்கும் பாசக்கயிறாகச் சகோதரர் செயல்படுகிறார்.

- ஏ. சாந்தி, ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ விவேகானந்தா
மெட்ரிகுலேஷன் பள்ளி,
அனல்மின் நகர், தூத்துக்குடி.

இந்த மொழிகள் உங்களுக்குத் தெரியுமா?

குதிரைமொழி, நங்கைமொழி, தச்சன்மொழி, நத்தைமொழி, இட்டமொழி, முதலைமொழி, முதுமொத்தன்மொழி, காயாமொழி. இவையனைத்தும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கிராமங்களின் பெயர்கள்.



இயற்பெயர்கள்

தூத்துக்குடி - திருமந்திரநகர்
திருச்செந்தூர் - திருச்சீரலைவாய்
விருதுநகர் - விருதுபட்டி.

- சு. கண்மணி, ஏழாம் வகுப்பு,
ஸ்பிக் நகர் மேல்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி.

தூத்துக்குடி ஸ்பெஷல்


எலியை சுவீகரித்த பரந்தாமன்!

மகத நாட்டு மன்னன் மயூரவர்மனின் நெருங்கிய நண்பன் பரந்தாமன். பரந்தாமன் மயூரவர்மனுக்கு நண்பன் என்ற முறையிலும் பெரும் செல்வந்தன் என்ற திமிரிலும், மற்றவர்களிடம் மிகவும் ஆணவத்துடன் நடந்து கொள்வான்.

பரந்தாமன் தன்னுடைய மாளிகை வாயிலில் அமர்ந்திருப்பான். அவன் மாளிகை வழியே செல்வோரில் யாராவது ஒருவரை வேலைக்காரன் முருகனிடம் காண்பித்து, "முருகா, அதோ சுப்பையா போகிறார். உடனே அவரை அழைத்து வா" என்பான். முருகன் ஓடிச் சென்று சுப்பையாவை அழைத்து வருவான்.

பரந்தாமன் சுப்பையாவிடம் அன்புடன் குசலம் விசாரிப்பான். 'சாப்பிட்டாகி விட்டதா' என்பான். முருகனை அழைத்து 'ஐயாவுக்கு அறுசுவை உணவு வழங்கு' என்பான். முருகன் வந்த நபரை அழைத்துச் சென்று அறுசுவை





என்.கோதண்டராமன்

உணவு வழங்கி, தாம்பூலம் கொடுத்து அனுப்புவான். பரந்தாமன் சுப்பையாவிடம் 'நன்கு சாப்பிட்டீர்களா?' என்று விசாரித்து வெள்ளித்தட்டு நிறையப் பழங்கள் வைத்து பத்து வெள்ளிக்காசும் வைத்து எடுத்துக் கொள்ளும்படிக் கூறி வழியனுப்பி வைப்பான்.

மறுமுறை சுப்பையா பரந்தாமன் பார்வையில் பட்டு விட்டால், உடனே முருகனை அனுப்பி அழைத்து வரச் சொல்வான். சுப்பையா வந்ததும் அந்த ஆளை தூணில் கட்டிவைத்து பத்து சவுக்கடி கொடுக்கும்படி உத்தரவிடுவான் முருகனுக்கு.


'ஏன் அடிக்கின்றீர்கள்?' என்று சுப்பையா கேட்டால் "அன்று அறுசுவை உணவு உண்டு பத்து வெள்ளிப் பணமும் பழங்களும் வாங்கிச் சென்றாயே, அன்று ஏன் என்று கேட்டாயா? அது போல்தான் இதுவும்", என்று கூறி குலுங்கக் குலுங்கச் சிரிப்பான். பரந்தாமனை எதிர்த்தால் மன்னன் மயூரவர்மனிடம் சொல்லி, தங்களைப் பழிவாங்கி விடுவானோ என்று மக்கள் பயந்தனர்.

பரந்தாமனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். ஒருவர் கிறித்தவர், மற்றொருவர் முஸ்லீம், மூன்றாவது நபர் இந்து.

இவர்கள் மூவரும் சேர்ந்து பரந்தாமன் மாளிகையில் அடிக்கடி ஏதாவது விசேஷ வைபவங்கள் நடத்தும்படி கூறி அவனிடம் இருந்து பெரும் பணம் பறித்து வந்தனர்.

ஒரு நாள் பரந்தாமனின் மாளிகையிலிருந்து நகரின் முக்கியப் பிரமுகர்களுக்கும் வியாபாரிகளுக்குமாக வேலையாட்கள் மூலம் 'நாளை பரந்தாமனின் மாளிகையில் மிக மிக முக்கிய விழா நடப்பதால் தவறாமல் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும். கலந்து கொள்ளாதவர்கள் மன்னரின் கோபத்துக்கு ஆளாவார்கள்' என்று மிரட்டலாகத்

இனிமையான உணவு



இயேசு நாதரிடம் சீடர் ஒருவர் உலகில் மிகவும் இனிமையான உணவு எது? என்று கேட்டார். அதற்கு இயேசுபிரான், "ஒருவன் தன் உழைப்பால் பெற்ற கூழ் அமிர்தத்திலும் மேலானது" என்றார்.

- நெ. இராமன்.

தெரிவிக்கப்பட்டது. நகரின் முக்கியப் பிரமுகர்களும் வியாபாரிகளும் காலையிலேயே பரந்தாமனது மாளிகையில் கூடி விட்டனர்.

பரந்தாமன் வந்த பிரமுகர்களைப் பார்த்து, "இன்று என் மாளிகையில் முக்கிய நிகழ்ச்சி ஒன்று உள்ளது. எனவே அனைவரும் முதலில் அறுசுவை உணவு உண்டு விட்டு மகிழ்ச்சியாக வாருங்கள்" என்றான். அனைவரும் விருந்து மண்டபத்தை நோக்கி நடந்தனர்.

சிறிது நேரத்திற்குப் பின் விசேஷம் நடைபெறும் மண்டபத்தில் அனைவரும் கூடி அவரவர் இருக்கையில் அமர்ந்தனர்.

பரந்தாமனும் கிறித்துவ, முஸ்லீம், இந்து நண்பர்களும் தனியாக அலங்காரமாக அமைக்கப்பட்ட மேடையில் வந்து அமர்ந்தனர்.

பரந்தாமன் எழுந்து பேச ஆரம்பித்தான்: "நகரின் முக்கியப் பிரமுகர்களே, வியாபாரிகளே இன்று நடக்கும் இந்த விழா ஒரு புதுமையான விழாவாகும்.

"அதாவது எனது சொத்துக்கு வாரிசாக மகன்களும், மகள்களும் உள்ளனர். இருந்தாலும் எனது மாளிகையிலே வசித்து வந்த எலி ஒன்று ஏழு குட்டிகளை ஈன்றுள்ளது. இது நடந்து ஒரு மாதமாகி விட்டது.

"அதில் ஒரு குட்டி எலியை நான் சுவீகாரமாகத் தத்து எடுத்து வளர்த்து வருகிறேன். அந்த எலிக் குட்டிக்குதான் இன்று பெயர் சூட்டு விழா. இது மாதிரி புதுமையான விழா இந்த உலகில் யாருமே நடத்தியிருக்க மாட்டார்கள். இந்த விழாவில் எனது நண்பர்கள் யோசனைப்படி கிறித்தவ நண்பர் கிறித்தவ மதப்படி பெயர் சூட்டுவார். அடுத்து முஸ்லீம் நண்பர் முஸ்லீம் முறைப்படி பெயர் சூட்ட, மூன்றாவதாக இந்து நண்பர் இந்து முறைப்படி பெயர் சூட்டி ஆசீர்வாதம் செய்வார். அனைவரும் ஆசீர்வாதம் செய்து எனது, சுவீகார மகனுக்கு ஆளுக்குப் பத்து பொற்காசுகளை அன்பளிப்பு செய்து செல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறி சிரித்தபடியே அமர்ந்தான்.

விருந்தினர் அனைவரும், "அடப்பாவி! பணக்காரக் கிறுக்கன் என்பதைச் சரியாக நிரூபித்து விட்டானே. இவனிடம் விருந்து உண்டதும் போதும், இந்தக் கிறுக்கன் செய்கிற முட்டாள்தனமான காரியத்துக்குப் பத்து பொற்காசுகள் வேறு அன்பளிப்பு செய்ய வேண்டுமா?" என்று ரகசியமாகப் பேச ஆரம்பித்தனர்.

வெள்ளியால் செய்யப்பட்ட வலைக் கூண்டு ஒன்று மேடையில் கொண்டு வந்து வைக்கப்பட்டது. அதனுள்ளே எலி ஒன்று சுற்றிச் சுற்றி ஓடி வந்தது.

முதலாவதாக கிறித்தவ நண்பன் எலி அருகில் வந்து நின்று புனித நீர் தெளித்து தேவசகாயம் என்று பெயர் சூட்டினான். அவனுக்கு வெள்ளித்தட்டு நிறையப் பொற்காசுகளைச் சிரித்தபடியே வழங்கினான் பரந்தாமன்.

அடுத்து முஸ்லீம் நண்பன் வந்து புனித நீர் தெளித்து அப்துல்லா என்று பெயர் சூட்டினான். அவனுக்கும் வெள்ளித் தட்டு நிறையப் பொற்காசுகளைச் சிரித்தபடியே வழங்கினான் பரந்தாமன்.

மூன்றாவதாக வந்த இந்து நண்பன் புனித நீர் தெளித்து வேங்கட விஜயன் என்று பெயரிட்டு ஆசீர்வதித்து வெள்ளித்தட்டு நிறையப் பொற்காசுகளை வாங்கிக் கொண்டு அமர்ந்தான். அந்த நேரம் எங்கிருந்தோ பறந்து வந்த ராட்சதக் கழுகு, எலிக் கூண்டை காலால் பற்றித் தூக்கியபடி வேகமாகப் பறந்து சென்றது. கழுகு வந்த வேகத்தைக் கண்ட மூவரும் பரந்தாமனும் மேடையிலிருந்து மூலைக்கொருவராய் சிதறி கீழே விழ, தங்கக் காசுகள் மண்டபம் முழுவதும் சிதறின.

விருந்துக்கு வந்த அனைவரும் "பரந்தாமனுக்கும் அவனது நண்பர்களுக்கும் சரியான பாடம் இது. தங்களுக்கும் ஆளுக்குப் பத்து பொற்காசுகள் மிச்சம்" எனக் கூறி சிரித்தபடி வெளியேறினர்.

பரந்தாமனின் ஆணவம் அன்றோடு அழிந்தது.

✉ நவம்பர் இதழ் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்திருந்தது. தவளையின் மேளம் கதையும் தீபாவளி கட்டுரையும் மிகவும் நன்றாக இருந்தன.

- என். சந்திரா, ஆத்தூர்.

✉ தவளை தாத்தையாவின் கதை படிக்கவும், பார்க்கவும் மிகுந்த சுவாரசியத்தைக் கொடுத்தது. தாத்தையாவின் மேளம் கிடைக்க பிரார்த்தனை செய்கிறேன். நடுபக்க விளையாட்டு சூப்பர்.

- ஆர்.எம். சுரேஷ்,
பத்தாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, விருதுநகர்.

✉ நவம்பர் இதழ் தர்மபுரி ஸ்பெஷலாக வெளிவந்ததற்கு மிக்க நன்றி. எங்கள் மாவட்டத்தைப் பற்றி எங்களுக்கே தெரியாத பல விஷயங்களை வெளியிட்டு இருந்தீர்கள்.

- மா.பழனி, கூத்தப்பாடி, தர்மபுரி.

✉ 'துரோகி யார்?' தொடர்கதை எனக்கு மிகவும் பிடித்து விட்டது. 'இலங்கை உருவானது எப்படி?' என்ற படக்கதையின் மூலம் இலங்கையின் பிறப்பை அறிந்து கொண்டேன். தர்மபுரி மாணவர் ஸ்பெஷல் நன்று.

- லோ. தரணிகுமார்,
திருக்கழுக்குன்றம்.

✉ சுடுகு தாளித்த பாயசம் கதையைப் படித்து நன்றாகச் சிரித்து விட்டேன். கோலா கரடிகளைப் பற்றிய தகவல்கள் சுவாரசியம். தீபாவளி பரிசு பெற்ற ஓவியங்கள் அருமை.

- என். கண்ணன், திருச்சி.

✉ 'சடுகுடு ஆடுது எலி' பாடல் பிரமாதம்! வாசுகியின் பலம் வாயுவின் முன்னால் அஞ்சியது- படக்கதை நன்றாக இருந்தது. கல்விக்கண் திறந்த காமராஜர் பாலருக்கு மட்டுமின்றி பலருக்கும் வழி காட்டியது.

- ஆர்.ஜி. உமா, திசையன்விளை.

✉ தோல்வியை எப்படி தாங்கிக் கொள்வது என்று ஜக்கு அளித்த பதில் எனக்குத் திருப்தியாய் இருந்தது. ஜோக்ஸ் அனைத்தும் நன்றாகச் சிரிக்க வைத்து விட்டன. ஜாம் - வாழைப் பழ பிஸ்கட் செய்து கொடுத்து அசத்தினேன்!

- கே. நாராயணி,
எட்டாம் வகுப்பு, துறையூர், திருச்சி.

✉ அட்டைப் படத்தில் ஒகேனக்கல் அருவி மிகவும் அழகாக இருந்தது. மூக்கு கதை மிகவும் சிரிப்பாகவும் சிந்திக்கும் படியும் அமைந்திருந்தது.

- வி. வனஜா,
மதுராந்தகம்.

✉ வரலாற்றில் சில அதிசயங்களைப் படித்து வியந்தேன். எப்படியெல்லாம் மனிதர்கள் இருந்திருக்கிறார்கள்! நடுபக்க விளையாட்டை ரசித்து விளையாடினேன். துணுக்குகள், மறக்கமுடியவில்லை பகுதிகள் எனக்கு மிகவும் பிடித்தவை.

- கே. சரவணன்,
பத்தாம் வகுப்பு, காரைக்கால்.

தாத்தையாவின் மேளம் அசத்தல்!



சுழல் கோப்பை யாருக்கு?
அடுத்த இதழில்...



பொறுமைசாலிக் கழுதைகள்!

பொன்னனும் பொன்னியும் தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்த தங்கள் மகள் சின்னியை அழைத்தன.

அருகில் வந்த சின்னி ''எதுக்குக் கூப்பிட்டீங்க?'' என்றது.

''ரொம்ப நாளா டவுனுக்குப் போகணும்னு ஆசைப்பட்டியே, இப்ப கிளம்பலாம். நம்ம எஜமான் அவசர வேலையா வெளியூர் போயிருக்கார். நாளைக்குத்தான் திரும்பி வர்றார்'' என்றது பொன்னன்.

சின்னிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. லேசாகக் கனைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.



மூன்றும் வேகமாகக் கிளம்பின. இரண்டு மணி நேரத்தில் டவுனை அடைந்தன. அங்கே சுவர்களில் பல வண்ண போஸ்டர்கள் கழுதைகளைக் கவர்ந்தன. மூன்றும் போட்டிப் போட்டுக் கொண்டு போஸ்டர்களைத் தின்ன ஆரம்பித்தன.

''தினமும் புல்லும் கொள்ளும் சாப்பிட்டு அலுத்த எனக்கு இந்தக் காகிதம் தேவாமிர்தமாக இருக்கு'' என்றது சின்னி.

''சீக்கிரம் சாப்பிடு சின்னி. யாராவது பார்த்தால் விரட்டுவாங்க'' என்றது பொன்னி.

அடுத்த அரைமணி நேரத்தில் அந்தத் தெருவில் உள்ள சுவர்கள் போஸ்டர்கள் இன்றி வெறுமையாகக் காட்சியளித்தன.

மூன்றும் மெதுவாக நடந்து வந்து ஒரு பள்ளியின் சுவற்றோரம் நின்றன. அப்போது பள்ளியின் உள்ளே இருந்து கழுதையைப் பற்றிய ஒரு கதையை மாணவன் ஒருவன் உரக்கக் கூற ஆரம்பித்தான். மூன்றும் காதைத்






தீட்டிக் கொண்டு நின்றன.

"உப்பு வியாபாரி தினமும் கழுதை மேல் உப்பை ஏற்றிக் கொண்டு அக்கரைக்குச் செல்வான். திடீரென்று ஒருநாள் கழுதை கீழே தள்ளி உப்பு கரைந்துவிட்டது. தொடர்ந்து கழுதை இப்படி செய்ய, மறுநாள் பஞ்சை ஏற்றி வந்தான் வியாபாரி.



கழுதை பஞ்சை நனைக்கச் சுமை கூடியது. கழுதைக்குப் புத்தி வந்தது."



கதையைக் கேட்டதும் சின்னிக்குப் பயங்கர கோபம் வந்தது.

"எப்படி அப்பா இந்த மனிதர்கள் நம்மை மட்டம் தட்டலாம்? ஓடிப் போய் அந்தப் பையனைக் காலால் உதைச்சிட்டு வரேன்" என்று கிளம்பியது சின்னி.

'சின்னி, கோபப்படாதே! இந்த மனிதர்கள் நம்மிடமிருந்து வேலை வாங்கிக்கறாங்க, பாலைக் கறந்துக்கறாங்க. தோலைக்கூட 'முழவு' என்ற இசைக் கருவி செய்யப் பயன்படுத்தறாங்க. ஆனாலும் கொஞ்சம் கூட நன்றியே கிடையாது. பாரு, நம்மைப் பற்றி தப்பான கதைகளைப் பரப்பறாங்க. என்ன பண்றது? வா போகலாம்" என்று கூறியது பொன்னன்.

"அது மட்டுமா, கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று எத்தனையோ பழமொழிகள் வேறு உள்ளன" என்றது பொன்னி.

"இப்படி பொறுமையாக இருக்கிறதாலதான் நமக்கு இப்படியெல்லாம் அவமானம் வருது" என்ற சின்னி வேகமாகப் பெற்றோருடன் நடந்தது.

சிறிது நேரத்தில் அந்த வழியே குதிரை ஒன்று வந்தது.

"என்ன பொன்னா, குடும்பத்தோட டவுனுக்கு வந்திருக்கே?" என்று கேட்டது குதிரை.


"இவ என் பொண்ணு சின்னி. டவுனைப் பார்க்கணும்னு சொன்னாள், அதான்... சின்னி, குதிரை மாமாவுக்கு வணக்கம் போடு. நாமும் குதிரையும் ஒரே சாதியைச் சேர்ந்தவங்கதான். குதிரை சாதியில் அசினஸ் என்னும் இனத்தைச் சேர்ந்தவங்க நாம்" என்றது பொன்னன்.

எஸ்.சுஜாதா



சின்னியைக் குதிரை பாசத்துடன் தட்டிக் கொடுத்தது.

"பொன்னா, நேரமாச்சு. நான் கிளம்பறேன்" என்று கூறி குதிரை வேகமாகச் சென்றது.



"அப்பா, குதிரை மேல் சவாரி செய்வது போல் நம் மீதும் மனிதர்கள் சவாரி செய்வார்களா?" - சின்னி.

"நம் இனத்தில் பல வகைகள் உண்டு. எடை குறைந்த இனம் சவாரி செய்யப் பயன்படுகின்றன. அரேபியாவில் மாடுகளைப் போல் நிலத்தை உழவும் சவாரி செய்யவும் கூடப் பயன்படுத்துகின்றனர். நாம் பொதி சுமக்கக் கூடியவர்கள். மலைப் பிரதேசங்களில் பொதி சுமந்து நாம்தான் மனிதர்களுக்குப் பெரிதும் உதவி செய்கிறோம்."

"அப்படியா! நாம் ஏன் மற்ற பிராணிகளைப் போல் காடுகளில் வசிக்கவில்லை?"- சின்னி.

"என் மகள் எவ்வளவு புத்திசாலி பார்த்தியா பொன்னி" என்று கேட்டது பொன்னன்.

சிரித்த பொன்னி "நம் மூதாதையர்கள் காடுகளில்தான் வசித்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் நம்மை வீட்டு விலங்காக அடிமைப்படுத்தி விட்டனர்" என்றது.

"இன்னொரு விஷயம் பொன்னி. ஒரு காலத்தில் மாடுகளைப் போல் நம்மையும் பாலுக்காக மந்தையாக வளர்த்திருக்கின்றனர் மனிதர்கள்" - பொன்னன்.

"அம்மா, பேசிக்கிட்டே வந்ததில் நடந்த களைப்பே தெரியலை. அதோ நம் வீட்டுக்கே வந்து சேர்ந்தாச்சு" என்று சின்னி சொல்லவும், பொன்னனும் பொன்னியும் கொள்ளு இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றன.

- கழுதைகள் நீண்ட காதுகளும் நிமிர்ந்த பிடரிமயிரும் உடையன.
- உலகில் எல்லா இடங்களிலும் கழுதைகள் வசிக்கின்றன.
- பல வகைகள் உள்ளன.
- துன்பத்தைப் பொறுக்கும் தன்மையும், எதையும் தின்னும் இயல்பும் கொண்டவை.
- துன்புறுத்தினால் பிடிவாத குணமுடையவை.
- கழுதைப் பாலில் சர்க்கரை அதிகமாகவும், கேசீன் குறைவாகவும் இருப்பதால் எளிதில் செரிமானம் ஆகும்.
- துன்புறுத்தினால் நன்றாகக் கடித்தும், பின்னங்கால்களால் உதைக்கவும் கூடியவை.
- ஆரோக்கியமான கழுதை நின்றபடிதான் தூங்கும்.
- அறிவான விலங்கு. நன்கு நினைவு வைத்துக் கொள்ளும்.
- பொதி சுமக்கவும், காடு, மலைகளைக் கடக்கவும் நன்கு பயன்படும்.



- குறைந்த அளவு நீரே பருகும்.
- கொள்ளு, புல், காகிதங்களை விரும்பி உண்ணும்.
- ஆயுட்காலம் 40 ஆண்டுகள். 25 ஆண்டுகள் நன்கு உழைக்கும்.

சிறுவர் மலர் சிறுவர் நாடகங்கள் - வி.என்.எஸ். உதயசந்திரன், பக்கம் 82 ரூபாய் நூறு - பூபால சிங்கம் புத்தக சாலை, இல. 202, செட்டியார் தெரு, கொழும்பு.

இலங்கை வானொலியின் சிறுவர் மலர் நிகழ்ச்சியில் ஒளிபரப்பான எட்டு அருமை யான நாடகங்களின் தொகுப்பு. ஒவ்வொன் றும் ஓர் அவசியமான பண்பை வலியுறுத்தும் கதைக் களத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழரின் பேச்சுத் தமிழழகை நன்கு சுவைக்க முடி கிறது. (புகைப்) படங்களும் நூலுக்கு மெரு கூட்டுகின்றது. அயல் நாட்டுத் தயாரிப்பு களுக்குச் சவால் விடும் படைப்பு. சிறுவர் இலக்கிய முன்னோடி டாக்டர் பூவண்ண னின் அணிந்துரை, நூலுக்கு மகுடமிடு கிறது.

நீதான் நெம்பர் ஒன் - ரவி பாரதி , பக். 104, இருபத்தைந்து ரூபாய் - சாகித்யா பிரசுரம் , 1-14, ஜோசப் நகர், 2வது குறுக் குத் தெரு, திருநகர், மதுரை 625006.

மாணவர்களை நல்வழிப்படுத்தவும் அவர் களுக்குள் ஒளிந்து கிடக்கும் திறமைகளை வெளிக் கொணர்ந்து ஒளிர வைக்கவும் தேவையில்லாத கனவுகளுக்கு விடை கொடுத்து ஆக்கப்பூர்வமாகச் சிந்தித்து உன் னத இலட்சியங்களை நோக்கி நடை பயி லவும் வழி காட்டும் கட்டுரைகளின் தொகுப்பு. குடியரசுத் தலைவரின் வாழ்த் தைப் பெற்ற பெருமையுடையது. மாணவர் உலகம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மழலையர் கல்விக்கு மணியான யோச னைகள், சா. எழிலன், பக்.148, ரூபாய் அறுபத்தைந்து, மணிமேகலைப் பிரசுரம், 7. தணிகாசலம் சாலை, தி.நகர் சென்னை 17.

தொடக்க வகுப்புகளில் பயிலும் குழந்



தைகளுக்கு எளிதாகவும் கவனத்தை ஈர்க் கும் வகையிலும் எப்படி கல்வி கற்பிப்பது என்பதற்கு வழிகாட்டும் நூல். ஆசிரியர் களுக்கு மட்டுமல்ல, பெற்றோர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்தத் திட்டத்தில் கவிமணி, பாரதியார், குழந் தைக் கவிஞர் ஆகியோரின் பாடல்களையும் சேர்த்திருப்பது சிறப்பைக் கூட்டுகிறது.

- ரே

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

அக்டோபர் இதழில் அறிவித்த போட் டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிறையப் பேர் சரியான விடைகளை அளித் திருந்தனர். சரியான விடை அளித்தவர் களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்:

1. ச. ஸ்ரீராம் குமார், ஒன்பதாம் வகுப்பு, வாணி வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, கரட்பாடி.
2. எஸ். தரங்கினி, குனியமுத்தூர், கோவை மாவட்டம்.
3. ஆர். வினோதினி, இடையர்காடு, தூத்துக்குடி மாவட்டம்.
4. பி.சிவசங்கரவேலாயுதம், நான்காம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திரா மெட்ரிகுலேஷன் பள்ளி, திருநெல்வேலி.
5. ஆ. முருகன், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப்பள்ளி, நல்லூர்.

சரியான விடை:

1. பூனையை வணங்கியவர்கள் - எகிப்தியர்கள்
2. இந்தியா மீது படையெடுத்த முதல் ஐரோப்பியர் - அலெக்ஸாண்டர்
3. குங்ஃபூ - திறமை
4. மரக்கானா ஸ்டேடியம் - ரியோடி ஜெனிரோ
5. 3780 மீ உயரமுள்ள எரிமலை - ஃப்யூஜியாமா
6. கொமடோ டிராகன் - மிகப் பெரிய பல்லி
7. தேங்காய்
8. டெல்லி தாமரைக் கோயில்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.


கோகுலம்
போஸ்டர்
மைக்கேல் பெவன்

ரிக்கி பாண்டிங்



வழக்கம் போல முதலில் ஒரு கதை.

ஒருவர் கழுதை வளர்த்து வந்தார். அதற்கு வயதாகி, உடல் நலம் குன்றியது. ஒருநாள் எதிர்பாராத விதமாக, அது, ஒரு பாழடைந்த, நீர் வறண்ட கிணற்றில் விழுந்து விட்டது.

''பாழடைந்த கிணறு; அதில் விழுந்து விட்டதோ ஒரு கிழக் கழுதை. நாமோ புதுக் கிணறு வெட்டியாகி விட்டது. பேசாமல் பழைய கிணற்றைத் தூர்த்துவிடலாம்'' என்று தீர்மானித்தார் அவர்.

அக்கம் பக்கத்தவர்களுக்குத் தகவல் கொடுத்தார். ஆளாளுக்கு, மண்ணை வாரி, கிணற்றுக்குள் போட்டால், கிணறும் தூர்ந்து போய் விடும். கழுதையும், கிணற்றுக்குள் சமாதியாகிவிடும் என்று திட்டம் போட்டார்.

அக்கம் பக்கத்தவர்கள் ஒன்று கூடினர். மண்ணை எடுத்து, கிணற்றுக்குள் போட ஆரம்பித்தனர். கிடுகிடுவென கிணற்றுக் குள் மண் மட்டம் உயர்ந்து கொண்டே வந்தது.



அட! கிணறு முற்றிலுமாக மூடப்பட்ட போது அந்த மனிதர் நினைத்ததுபோல, கழுதை கிணற்றுக்குள் சமாதியாகிவிட வில்லை; மாறாக, கிணற்றிலிருந்து வெளியே நடந்து வந்தது.

எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம்!

இது எப்படி நிகழ்ந்தது?

கிணற்றுக்குள் எல்லோரும் மண்ணை அள்ளிப் போட்டபோது, கழுதை சோர்ந்து போய் சும்மா இருந்துவிடவில்லை. மாறாக, எழுந்து நின்று மண் மட்டம் உயர, உயர அதன் மீது தாவி ஏறிமேலே வந்து, கிணறு முழுவதுமாகத் தூர்ந்து போகும் தருணம், வெளியே வந்துவிட்டது.

இந்த வயதான கழுதை நமக்குச் சொல்லித் தரும் பாடம் என்ன?

பிரச்னைகள் வரவே செய்யும். அப்போது நாம் மனம் தளர்ந்து சும்மா இருக்கக் கூடாது. அதைச் சமாளிப்பது எப்படி என்று யோசிக்க வேண்டும். அதனைத் திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும். பிரச்னைகளைத் தீர்த்து, நம் வாழ்க்கையில் வெற்றி நடை போடலாம்.

தேசிய பழம் எது?


அடுத்து சில பொது அறிவு சம்மந்தமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாமா?

பூமி உருண்டையின் மேல் பகுதியில் உள்ள துருவம் வட துருவம். அதேபோல தென்முனையில் இருப்பது தென்துருவம்.

இரண்டு பேர் நேரெதிரான குணநலன்களைக் கொண்டிருந்தால், 'இரண்டு பேரும் இரண்டு துருவம்' என்பது வழக்கம்தானே! அதேபோல, வடதுருவம், தென் துருவம் இரண்டும் குளிர் பிரதேசம் என்கிற ஒற்றுமை தவிர, ஏகப்பட்ட விஷயங்களில் வேற்றுமைகள்தான்.

வடதுருவத்தை ஆர்டிக் பிரதேசம் என்றும், தென் துருவத்தை அண்டார்டிக் என்றும் குறிப்பிடுகிறோம்.

ஆர்டிக் பிரதேசம், ஆர்டிக் பெருங்கடலால் சூழ்ந்த பகுதி. இங்குள்ள நிலப்பரப்பு என்று வட அமெரிக்கா



ஆசியா, ஐரோப்பாக் கண்டங்களின் வட பகுதியில் இருக்கும் சிறிதளவு நிலப்பரப்பு மட்டுமே உள்ளது. ஆனால், அண்டார்டிகா

பகுதியில் பனி மற்றும் ஐஸ் உறைந்த நிலப் பகுதி உள்ளது. இது, அமெரிக்கா நாட்டைப் போல இரு மடங்கு பரப்பு கொண்டது.

வடதுருவப் பகுதியில், விலங்குகளும், தாவரங்களும் உண்டு. வடதுருவப் பகுதியில் உள்ள நாடுகளின் மக்கள், தங்களைத் துருவப் பகுதி வாழ்க்கைக்குப் பழக்கப் படுத்திக் கொண்டு, அப் பகுதியில் குடியேறி வசிக்கிறார்கள். ஆனால், தென் துருவத்தில் மனிதர்களோ, தாவரங்களோ, விலங்கினங்களோ கிடையாது. சில புழு, பூச்சி இனங்களும், புல்வகைகள் மற்றும் சிறு தாவர வகைகள் மட்டுமே உண்டு.

இரு துருவங்களிலும், கோடையின் உச்சத்தில்கூட கடுமையான குளிர்ச்சிதான் இருக்கும். அண்டார்டிகா பகுதியில் குளிர் காலத்தின் உச்சத்தில் தட்ப வெப்பம் மைனஸ் முப்பத்து ஐந்து டிகிரியைத் தொடும்.

துருவப் பகுதியில் வாழும் முக்கிய விலங்கினம் பெங்குயின் (தென் துருவம்), துருவக்கரடி (வட துருவம்).



இனி நம் நாட்டு விஷயங்கள்...

● நம் இந்திய அரசின் மூன்று சிங்க முத்திரையின் கீழே சத்தியமேவ ஜயதே (வாய்மையே வெல்லும்) என்று குறிப்பிடப் பட்டுள்ளதல்லவா? இந்த வாசகம் முண்டக உபநிஷத்திலிருந்து எடுக்கப்பட்டது.


● நம் தேசியகீதமான ஜன கன மன பாடலை முழுமையாகப் பாடி முடிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட நேரம் எவ்வளவு தெரியுமா? 52 விநாடிகள்.

● நம் நாட்டின் தேசிய விலங்கு, பறவை இதெல்லாம் அனைவருக்கும் தெரியும். தேசிய பழம் எது தெரியுமா? மாம்பழம் தான்.

● நம் தேசிய விளையாட்டான ஹாக்கியின் பொற்காலம் என்று 1928 முதல் 1956 வரையிலான கால கட்டத்தைச் சொல்லலாம். அந்தச் சமயத்தில் தொடர்ந்து ஆறுமுறை ஒலிம்பிக்கில் ஹாக்கியில் நாம் தங்கப்பதக்கம் வென்றிருக்கிறோம்.

கம்ப்யூட்டர் என்றால் 'மௌஸ்' உண்டு. இந்தப் படத்தில், ஒருவர், எதைப் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்று பாருங்கள். கம்ப்யூட்டரின் மௌஸ் அக்கடா என்று இருக்க, நிஜ மௌஸ் கம்ப்யூட்டரை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

கம்ப்யூட்டர் திரையில் பூனையின் படம் வந்தால் இந்த மௌஸ் என்ன பண்ணும்?



கடைசியாய் ஒரு புதிர்.

இப்போது ஜெர்மனி என்பது ஒரே தேசமாகி விட்டது. ஆனால் முன்பு அது கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி என்று இரண்டாகப் பிரிந்து இருந்தது. இரண்டுக்கும் இடையே ஒரு சுவர்கூட உண்டு.

அந்தக் கால கட்டத்தில் ஒரு பயணிகள் விமானம் வானில் பறந்து கொண்டிருந்தது. திடீரென்று அதன் இஞ்சின்களில் அடுத்தடுத்து கோளாறு ஏற்பட்டுவிட, விமானம் நேராக அந்தச் சுவரின் மீது மோதியது. மொத்தப் பயணிகளில் ஆறு பேர் தவிர, பைலட் உட்பட அனைவரும் இறந்து போனார்கள்.

இப்போது சொல்லுங்கள், உயிர் பிழைத்தவர்களின் உடல்களை எங்கே புதைக்க வேண்டும்? கிழக்கு ஜெர்மனியிலா? மேற்கு ஜெர்மனியிலா? அல்லது அவரவர் நாட்டிலா?


தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

விடை: மூன்று விடைகளும் தவறு. உயிர் பிழைத்து விட்டவர்களை எதற்காகப் புதைக்க வேண்டும்?

8 விஞ்ஞானி கடத்தல்!

கதை, படம்: முத்து




அங்கிள் ஏதாவது செய்து காப்பாற்றுங்க.
ஆகாஷ் ஏதோ ஒரு பட்டனை அழுத்தினான்.
!
?
இருபுறமும் இறக்கைகளை விரித்துக் கொண்டு விமானமாக மாறியது ஜீப்.
ஜீப் உயரே பறந்தது.
ஹை, ஜாலி!
!?!
அங்கே பாரேன் அதிசயத்தை! ஜீப் பறக்குது! என்னென்னமோ நடக்குதுப்பா.



சிறிது நேரத்தில் -
அங்கிள் நாங்க கொஞ்சம் நடந்துட்டு வர்றோம்.
ரகு அங்கே பாரேன். யாரோ ஓர் ஆள்...
...பதுங்கிப் பதுங்கிப் போறான். காட்டுவாசி மாதிரி தெரியலையே!
இங்கே எப்படி வந்தான்? அவனைப் பின் தொடர்ந்து போவோம்.
ஏதோ மர்மம் இருக்கு.
திடீரென்று -
ஐயோ மறைஞ்சுட்டானே!
எங்கே போயிருப்பான்?
நாம அங்கே போய் பார்க்கலாம்.
இருவரும் வேகமாக நடந்தனர்.
அக்கா, ஹெல்ப்...
!?!


குழிக்குள் விழுந்தான் ரகு.
என்னடா ஆச்சு ரகு?
இது ஒரு சுரங்கப்பாதை மாதிரி இருக்கு.
இங்கேயே இரு. அங்கிளை அழைச்சிட்டு வர்றேன்.
ஜானு டார்ச்லைட் கொடுத்தாள்.
ரகு, உள்ளே போக வேண்டாம். மேலே வா.
பயப்படாதீங்க. மாத்திரை இருக்கு.
அதன் பின் -
ரகு வருவதற்குள் ஸ்டெப்னியை மாற்றி ஜீப்பை ரெடி பண்ணலாம்.
அப்போது அவர்களை நோக்கி உறுமியபடி வந்தது ஒரு புலி.
!
(தொடரும்)

கோகுலம் – ஸ்ரீ க்ருஷ்ண ஸ்வீட்ஸ்®

இணைந்து வழங்கும்

'புதிய பாரதம்'

நம் நாட்டின் பாரம்பரியக் கலைகளை மாணவ, மாணவியரிடம் எடுத்துச் செல்லும் நோக்கில் 'புதிய பாரதம்' என்ற நிகழ்ச்சியை பள்ளிகளில் நடத்தி வருகிறோம். இந் நிகழ்ச்சியை கோகுலம் - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து வழங்குகிறது. பேச்சுக் கலை, ஓவியம், எழுத்து, சிற்பம், பாட்டு, நடனம் போன்ற தலைப்புகளில் நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

'புதிய பாரதம்' முதல் நிகழ்ச்சி சென்னை மைலாப்பூரில் உள்ள லேடி சிவசாமி ஐயர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அக்டோபர் 22ம் தேதி நடைபெற்றது.

இருநூறுக்கும் மேற்பட்ட மாணவியர் கலந்து கொண்டனர். டாக்டர் சுதா சேஷய்யன் அவர்கள் பேச்சுக் கலை பற்றி ஒன்றரை மணி நேரம் நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தினார்.

பேச்சுக்கலை என்றால் என்ன?

- கலை என்றால் அழகு என்று பொருள்.



* டாக்டர் சுதா சேஷய்யன்



பேச்சுக் கலை என்றால் அழகாக, தெளிவாக, புரிந்து கொள்ளும்

* தலைமை ஆசிரியர்















• நிகழ்ச்சியில் பேசிய மாணவிகள்



படி பேசுதல். பேச்சுக் கலைக்கு முதலில் தேவை தைரியம். நூறு பேர்களுக்கு மத்தியில் பேச தைரியம் முதலில் வேண்டும் பேசுபவர்கள், கூட்டத்தில் இருக்கும் அனைவருக்கும் ஒன்றுமே தெரியாது. நமக்குத்தான் எல்லாம் தெரியும் என்று நினைத்துக் கொண்டால் தைரியம் தானாகவே வந்துவிடும்.

• பேச்சுக் கலைக்கு அடுத்த தேவை தகவல். சிறந்த பேச்சாளர்கள் எப்பொழுதும் கண்களையும், காதுகளையும் திறந்து வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நடப்பு விவகாரங்களைப் பேச்சுடன் இணைத்துப் பேச முடியும்.

• நீளமான வாக்கியங்கள் தேவை இல்லை. படிக்கட்டில் ஏறுவது போல் சிறிது சிறிதாக விஷயங்களைக் கொண்டு செல்ல வேண்டும்.

• தலைப்பைப் பற்றிய விளக்கத்தை முதலில் கூறி விட்டுப் பிறகு மற்ற செய்திகளைக் கூற வேண்டும்.

• மிகச் சாதாரண தகவல்களை முதலிலும், கடினமான விஷயங்களை இறுதியிலும் பேச வேண்டும்.

• சான்றோர்களைப் பற்றிப் பேசும் போது அவர்களுடைய கருத்துகளை அதிகம் பயன்படுத்த வேண்டும்.

• அதிகம் தெரியாத விஷயங்களைப் பேசினால் சிறப்பாக இருக்கும்.

• யாராவது சொன்ன மேற்கோள்களை இரண்டு நிமிடம் பயன்படுத்தலாம். மேற்கோள்களையே அதிக நேரம் பயன்படுத்தக் கூடாது.

• பேச்சில் முடிந்தவரை நகைச்சுவையைத் தேவைப்பட்ட இடங்களில் சேர்த்துக் கொள்ளலாம்.


• பேசும்போது பாவங்கள் அவசியம் வேண்டும். குரலில் ஏற்றத் தாழ்வு இருக்க வேண்டும்.

• பயிற்சி செய்யச் செய்ய, பேச்சுக்கலை பிரமாதமாக வரும்.

இந் நிகழ்ச்சியில் சத்யா, மிதுனா, ஸ்ரீரம்யா, அபர்ணா, சுப சரண்யா, உத்ரா மண்டேலா, புவனேஸ்வரி ஆகிய மாணவிகள் பல்வேறு தலைப்புகளில் பேசினர். அவர்களின் பேச்சை இன்னும் எப்படி அழகாக்கலாம் என்று விளக்கம் அளித்தார் சுதா சேஷய்யன்.

மாணவியர், ஆசிரியர்கள் மத்தியில் இந் நிகழ்ச்சிக்கு அதிக வரவேற்பு இருந்தது. தலைமை ஆசிரியர் தலைமை ஏற்றுப் பேசினார். கோகுலம் - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சார்பாக சிறப்பு விருந்தினர், தலைமை ஆசிரியர், பங்கேற்ற மாணவியர் அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

படங்கள் : ஸ்ரீஹரி



ஹலோ சுகமா?

டாக்டர் கு.கணேசன்

* வே. அருளானந்தன், வத்தலகுண்டு.

? எனக்கு அடிக்கடி தும்மல் வருகிறது. மூக்கு ஒழுகுகிறது. சளி பிடிக்கிறது. மருந்து சாப்பிட்டால் சரியாகிறது. ஆனால் மீண்டும் இந்தத் தொந்தரவு ஏற்படுகிறது. இதற்கு என்ன செய்யலாம் டாக்டர்?

! இந்தப் பிரச்னை ஒவ்வாமை காரணமாக வருகிறது. குளிர்ந்த காற்று, பஞ்சு, புகை, தூசு, வீட்டில் உள்ள ஒட்டடை, சாம்பிராணிப் புகை, பூக்களின் மகரந்தங்கள், வளர்ப்புப் பிராணிகளின் உடலிலிருந்து விழும் துகள்கள், நெய், வெண்ணெய், மீன், முட்டை, தயிர், தக்காளி போன்ற உணவுகள், பெனிசிலின், ஆஸ்பிரின், சல்போனமைடு போன்ற மருந்துகள் ஆகியவை பொதுவாக ஒவ்வாமை தரக்கூடிய பொருள்கள். இவற்றில் உங்களுக்கு எது ஒவ்வாமையை உண்டாக்குகிறது என்பதை 'ஒவ்வாமை பரிசோதனை' மூலம் தெரிந்து கொண்டு அதனைத் தவிர்த்தால் தும்மலிடமிருந்து நிரந்தரமாக விடுபடலாம்.

* கி. கார்த்திகைச் செல்வி, அருப்புக்கோட்டை

? நமக்கு நாடித்துடிப்பு எப்படி ஏற்படுகிறது டாக்டர்?

! இதயம் ஒவ்வொருமுறை சுருங்கி விரியும்போது ரத்தத்தில் அழுத்தம் ஏற்படுகிறது. இது தமனி ரத்தநாளங்களில் பரவுகிறது. இதயம் சுருங்கும்போது அழுத்தம் அதிகமாக இருக்கும். இந்த அழுத்தமானது தமனி ரத்தநாளத்தை விரிவடையச் செய்கிறது. இதுதான் நாடித்துடிப்பாக நாம் ரத்த நாளத்தைத் தொடும்போது தெரிகிறது. கையின் மணிக்கட்டு, கழுத்தின் பக்கப்பகுதிகள், தொடையிடுக்கு, முழங்கால் மற்றும் கணுக்கால் ஆகிய இடங்களில் உள்ள தமனி நாளங்களில் நாடித்துடிப்பை அறியலாம். இதயத்துடிப்பும் நாடித்துடிப்பும் எண்ணிக்கையில் ஒன்றுதான். ஆகையால் இதயத்தின் செயல்திறனை நாடித்துடிப்பின் வழியாகத் தெரிந்து கொள்ளலாம்.

* செ. நாகரத்தினம், நாகர்கோயில்

? எனக்கு வயது 12, மிகவும் குண்டாக இருக்கிறேன். உடல் எடை குறைய மாத்திரைகள் இருக்கிறதா?

உடல் எடை குறைய என்ன வழி?

உன் உடல் எடை அதிகரிக்க என்ன காரணம் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதிகப்படியான உணவைக் குறைக்கலாம். குறிப்பாக, கொழுப்புள்ள உணவுகளைத் தவிர்க்கலாம். எண்ணெயில் வறுத்த உணவுகள் மற்றும் நொறுக்குத்தீனிகளைக் குறைக்கலாம். கொழுப்புச்சத்து குறைந்த உணவுகளை மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிடலாம். தினமும் அரை மணிநேரம் உடற்பயிற்சிகளைச் செய்யலாம்; நடக்கலாம்;

ஓடலாம்; நீந்தலாம். உடற்பயிற்சி அல்லது யோகா முறையில் எடையைக் குறைப்பதே நிரந்தரப் பலன் தரும். தைராய்டு பிரச்னை இருந்தால் அதற்கு முறையான சிகிச்சை பெறும்போது உடல் எடை குறையும். 'லைப்போசக்சன்' எனும் அறுவை சிகிச்சை மூலமும் உடல் எடையைக் குறைக்க முடியும்.

* க. முரளீதரன், கோவை - 2

? சர்க்கரை நோயாளிகள் கோதுமை உணவை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்களே, ஏன் டாக்டர்?



! அரிசியோடு ஒப்பிடும்போது, கோதுமை, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களில் நார்ச்சத்து அதிகமாக இருப்பதால், இவற்றில் உள்ள மாவுச்சத்து வயிற்றில் செரிமானமடைந்து, ரத்தத்தில் கலப்பதற்கு அதிக நேரமாகும். இதனால் ரத்தத்தில் சர்க்கரை அளவு உடனே அதிகரிக்காது. மேலும், தென்னிந்தியர்களின் முக்கிய உணவு அரிசிச் சாப்பாடுதான். கோதுமை இன்றைக்கும் ஓர் அந்நிய உணவாகவே உள்ளது. ஆகையால் கோதுமை உணவைக் குறைவாகவே உண்ணத் தோன்றும். இதனாலும் ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

* வே. சொர்ணவள்ளி, வேலூர்

? பிறந்த சில மாதங்களுக்குக் குழந்தைகள் அழுதாலும் கண்ணீர் வருவதில்லையே, ஏன்?

! பிறந்த குழந்தைக்குக் கண்ணீர்ச் சுரப்பிகள் முழு அளவில் வளர்ச்சி பெற்றிருப்பதில்லை. இதனால்தான் குழந்தைகள் அழும்போது கண்ணீர் வருவதில்லை. குழந்தை வளர வளர கண்ணீர்ச்சுரப்பிகளும் வளர்ச்சி அடைந்து விடும். அதன் பிறகு கண்ணீர் வரும்.

புதிர் இங்கே! விடை கீழே!

1. சர்க்கரை நோய்க்குக் காரணமாக விளங்கும் இன்சுலின் எங்கு உற்பத்தியாகிறது?
   அ. கல்லீரல்
   ஆ. கணையம்
   இ. இரைப்பை

2. பசலைக்கீரையில் எந்தச் சத்து அதிகம்?
   அ. புரதம்
   ஆ. வைட்டமின்கள்
   இ. தாதுச்சத்து

3. மிக அரிய ரத்தவகை எது?
   அ. AB
   ஆ. O
   இ. Bombay -O

4. முடியின் நிறத்தை நிர்ணயிக்கும் வேதிப் பொருள் எது?
   அ. மெலனின்
   ஆ. ஹிஸ்டமின்
   இ. குளோபுலின்

5. டெங்கு காய்ச்சல் எவற்றின் மூலம் பரவுகிறது?
   அ. ஈக்கள்
   ஆ. கொசுக்கள்
   இ. தண்ணீர்

---

1. ஆ 2. அ 3. இ 4. அ 5. ஆ

விடை இங்கே!

3. ஆபத்தில் படகுப் பயணம்!

துரோகி யார்?

'பாண்டுஸி'ன் கலகலப்பான பேச்சுகளையும், கதைகளையும் கேட்டு ரசித்துக் கொண்டே வந்த படகோட்டிக்குத் திடீரென்று தலை சுற்றல் ஏற்பட்டது. இன்னும் கரைக்குக் கணிசமான தூரம் இருந்தது. நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்ட படகோட்டி தன்னைச் சுதாரித்துக் கொள்ள முயன்றார். ஆனால் அதற்குள் அவரது வலது கையில் இருந்த துடுப்பு ஏரிக்குள் விழுந்து மறைந்தது.

படகு தடதடவென ஆடியது. ஐவரும் அலறினார்கள். அருகில் வேறு எந்தப் படகும் தென்படவில்லை. பல படகுகளில் பள்ளி மாணவர்கள் ஒரே சமயத்தில் ஏறியது உண்மைதான். ஆனால் அந்தப் பரந்த ஏரியில் பல்வேறு திசைகளில் அவை பிரிந்து போயிருந்தன.

படகின் ஆட்டத்தில் பிரகாஷ் நீருக்குள் விழுந்து விட்டான். படகைப் பிடித்தபடி அவன் தத்தளித்துக் கொண்டிருக்க, அந்த இழுப்பின் காரணமாகப் படகு மேலும் சாயத் தொடங்கியிருந்தது.

சரவணப்பெருமாள் மின்னலாகச் செயல்பட்டான். சட்டென்று நீரில் குதித்தான். அரைகுறை மயக்கத்திலிருந்த பிரகாஷின் உடலை இறுகப் பற்றியபடி கரையை நோக்கி நீந்தத் தொடங்கினான்.

அந்த அவசரத்திலும் அகல்யாவின் மூளை வேலை செய்தது. படகோட்டியின் கையிலிருந்த ஒரே துடுப்பை தான் வாங்கி இருபுறமுமாக மாறி மாறி செலுத்தத் தொடங்கினாள். கூடவே ராஜுவும் உதவி செய்தான்.

சில நிமிடங்கள்தான். படகோட்டியும் தன் நினைவுக்கு வந்து விட்டார். அவர்களிடமிருந்து துடுப்பை வாங்கி, அந்த ஒற்றைத் துடுப்பைக் கொண்டே லாகவமாகப் படகைக் கரையேற்றினார்.

மூன்று பேரும் இறங்கி ஓடினார்கள் - பிரகாஷுக்கு என்னவானதோ என்ற கவலை அவர்கள் மனத்தின் அடிவரை ஊடுருவியிருந்தது. பிரகாஷ் படுக்க வைக்கப்பட்டிருந்தான். பக்கத்தில் கவலையோடு சரவணப்பெருமாள். "ஒண்ணுமில்ல. பயத்துல மயக்கமாயிட்டான். இப்ப சரியாயிடும்'' என்றான். அவன் கூறியபடியே கொஞ்ச நேரத்தில்



அருண் சரண்யா

பிரகாஷ் மயக்கம் தெளிந்து எழுந்தான். ஆலிஸ் அருகில் இருந்த டீக் கடையில் இருந்து ஒரு கோப்பை தேநீரை வாங்கி அவனுக்குக் கொடுத்தாள்.

சில நிமிடங்களில் இயல்பான நிலைக்கு வந்தார்கள்.

"டேய் சரவணா, படகு கவிழ்ந்தால் நீ மட்டும் நீச்சல் அடிச்சு போயிடுவேன்னு சொன்னியே?" என்று ராஜு கேட்க, "நிஜமாகச் சொல்றதுக்கும் கிண்டல் அடிக்கறதுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூட புரிஞ்சுக்காம போயிட்டியே" என்றபடி, ராஜுவின் தலையில் ஒரு குட்டை வழங்கினான் சரவணப் பெருமாள். அந்தக் குட்டு இதமாக இருந்தது ராஜுவுக்கு.

சற்று நேரம் கழித்துதான் பிற படகுகள் வந்து சேர்ந்தன. படகு விபத்து பற்றி இப்போதைக்கு மற்ற யாரிடமும் சொல்லக் கூடாது என்று பாண்டூஸ் முடிவெடுத்தார்கள். 'எதற்கு ஆசிரியர்களையும், பிற மாணவர்களையும் கிலிப் படுத்த வேண்டும்?' என்று வெளிப்படையாகப் பேசினாலும், இது தெரிந்தால், மீதிச் சுற்றுலா முழுவதும் ஆசிரியர்கள் மிகவும் அதிகப்படி கண்டிப்போடு இருப்பார்கள் என்ற பயமும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது.

எல்லோருமாகத் தங்களுக்கென ரிசர்வ் செய்யப்பட்ட காட்டேஜை நோக்கி நகரத் தொடங்கினார்கள்.

'போட்டிங் எப்படி இருந்துச்சு?' என்று ஒரு டீச்சர் கேட்க, 'பிரமாதம்', 'சூப்பர்' என்றெல்லாம் மாணவக் குரல்கள் எதிரொலித்தன. பாண்டூஸ் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

அப்போது 'ஆலிஸ்' என்ற கரகரத்த அந்தக் குரல் மிக உச்சமாக ஒலித்தது. யார் இந்த அம்மாள்?

மிகவும் பருமனான சரீரம் கொண்ட ஒரு அம்மாள் வெகுவேகமாக ஆலிஸை நோக்கி வந்தாள். ஓட்டம் நடை இரண்டின் கலவையாக இருந்த அவளது இயக்கம், எல்லா மாணவ மாணவிகளுக்குமே வேடிக்கையாக இருந்தது.

வந்தது ஆலிஸின் சித்தி. கொடைக்கானலில் பல வருடங்களாக வசிப்பவள். எதிர்பாராமல் தன் அக்காள் மகளைச் சந்தித்ததில் அவளுக்கு இன்ப அதிர்ச்சி. "ஆலிஸ், மை சைல்ட்" என்றபடியே சித்தி கட்டிக் கொள்ள, ஆலிஸுக்கு வெட்கமாக இருந்தது.

அல்போன்ஸ் மிஸ் அருகில் வந்தாள்,





"ஆலிஸ், உனக்கு வேண்டியவங்களா?" என்றாள்.

"ஆமாம் மிஸ், எங்க சித்தி. பேரு காத்தரின்" என்று அவள் கூறியதும், "சரி அப்ப கொஞ்ச நேரம் பேசிட்டு வா. நாங்கள்லாம் கொஞ்சம் தள்ளி வெயிட் பண்றோம்" என்று பெருந்தன்மையாக மிஸ் நகரத் தொடங்கினாள். ஆனால் ஆலிஸின் சித்தி அவளை விடுவதாக இல்லை.

"மிஸ், எனக்காக ஒரு சின்ன ஃபேவர் பண்ணணும். ரெண்டாவது தெருவிலே எங்க வீடு இருக்கு. ஆலிஸைக் கொஞ்ச நேரம் அங்க கூட்டிட்டுப் போய்ட்டு வந்துடறேன்" என்று கெஞ்சினாள்.

அல்போன்ஸ் மிஸ்ஸுக்குத் தயக்கமாக இருந்தது. சுற்றுலா என்று கிளம்பிவிட்டு ஒரு மாணவியை மட்டும் தனியே அனுப்புவது எப்படி? ஆலிஸ் அதை உணர்ந்து கொண்டாள்.

"சித்தி, ரெண்டு மாசம் கழிச்சு அப்பாம் மாவோட கொடைக்கானலுக்கு ஒரு ட்ரிப் வரப் போறோம். அப்போ உங்க வீட்லதான் அஞ்சு நாள் தங்குவோம். இப்ப வேணாமே" என்றாள்.

"அதெப்படி ஆலிஸ், இவ்ளோ தொலைவு வந்திருக்கே. வீட்டுக்கு வராம அனுப்புவேனா? ஒரு மணி நேரத்துல உன்னை விட்டுடறேன்" என்று மீண்டும் வலியுறுத்தினாள் சித்தி.

அல்போன்ஸ் மிஸ்ஸுக்குப் பாவமாக இருந்தது. "ஆலிஸ், சரியா ஒரு மணி நேரத்துல வந்துடணும். நிறைய விளையாட்டு நிகழ்ச்சிகள், கேம்ப்ஃபயரெல்லாம் ஏற்பாடு செய்திருக்கேன்" என்றாள்.

ஆலிஸ் நிச்சயம் தங்கள் நாலு பேரையும் சித்தியின் வீட்டுக்கு அழைப்பாள் என்பதில் ராஜு உறுதியாக இருந்தான். ஆனால் இது வரை ஏன் ஆலிஸ் வாயைத் திறக்கவில்லை? ராஜுவுக்கு வியப்பாக இருந்தது.

ஆலிஸும் அவள் சித்தியும் எதிர்த் திசையில் நடக்கத் தொடங்கியிருந்தனர். சற்று தூரம் தள்ளி ஒரு மரத்து நிழலில் ஆலிஸும் அவள் சித்தியும் தீவிரமாக ஏதோ பேசுவது தெரிந்தது. என்னவாக இருக்கும்? சித்தியிடம் தனிமையில் "என்னோட நாலு ஃப்ரெண்ட்ஸையும் உங்க வீட்டுக்கு அழைச்சிட்டு வரேன்" என்று ஆலிஸ் கூறியிருக்கலாம். அதற்கு அந்தச் சித்தி மறுக்கிறாளோ?

ராஜுவுக்கு ஆர்வத்தை அடக்க முடியவில்லை. சத்தமின்றி அந்த மரத்தின் மறுபக்கத்தில் போய் நின்றான். அவர்கள் பேசுவது தெளிவாகவே கேட்டது.

"ஆலிஸ், உனக்கு நாலு ஃப்ரெண்ட்ஸ் ரொம்ப க்ளோஸாமே. உங்கம்மா அடிக்கடி சொல்லுவாங்க" என்றாள் ஆலிஸின் சித்தி.

"ஆமாம், அவங்ககூட இந்த பிக்னிக்கிற்கு வந்திருக்காங்க. சாரி, அறிமுகப்படுத்த மறந்துட்டேன்" என்றாள் ஆலிஸ்.

"அதுக்காகத்தான் இங்கே நின்னேன். போய் அவங்களையும் நம்ம வீட்டுக்கு அழைச்சிட்டுவா. இன்னிக்குதான் புதுசா கேக்ஸ், ஐஸ்க்ரீமெல்லாம் வாங்கி வச்சிருக்கேன். எல்லாரும் ஷேர் பண்ணிக்கலாம்."

"ஆலிஸின் சித்தி இப்படி கூறியவுடன் ராஜுவுக்கு நாக்கில் எச்சில் சுரந்தது.

ஆனால் ஆலிஸ் அளித்த பதிலில் அவன் சுருண்டு போனான்.

"அதெல்லாம் வேணாம். நான் மட்டும் உங்கவீட்டுக்கு வந்து அதையெல்லாம் ஒரு கை பார்க்கறேன். சீக்கிரம் நடங்க சித்தி."

(தொடரும்)

கையில் என்ன கட்டு?



''நம்ம கட்சி அலுவலகத்திலே ஒருத்தர் எப்போதும் மரத்து மேலேயே உட்கார்ந்திருக்காரே, அவர் யார்?''

''அவர் நம்ம கட்சியின் கிளைச் செயலாளர்... அதான்!''

- பு.வீரமணி,
அ.மே.நி.பள்ளி, நல்லூர்

''என்னடா கையில கட்டு?''

''நேத்து நம்ம மாடியில ஏறும் போது கீழே விழுந்து கையை உடைச்சிக்கிட்டேன்.''

''என்னது? நம்ம வீட்டுலதான் மாடியே இல்லையே''.

''இருக்குன்னு நினைச்சு ஏறிட் டேன், அதான்...''

- பா. விஜயசாரதி





''எங்க மளிகைக் கடையில நூறு ரூபாய்க்கு என்ன வாங்கினாலும் ஒரு பேனா இலவசம்.''

''அப்படின்னா எனக்கு நூறு ரூபாய்க்குச் சில்லறை கொடுங்க.''

- ச. லெட்சுமணன்
திருநெல்வேலி

''நான் பாட்டுப் பாடினா எங்க தெருவே நின்னு கேக்கும்.''

''ஏன், பாட்டுப் பாடி எங்களைக் கொல்றேன்னுதானே!''

- செ. ஆசைத்தம்பி





கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....


....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

வழிகாட்டும் நட்சத்திரங்கள்...



• ஃபாரடே




கடிதம்...

எந்தப் பொருளையும் வீணாக்க காந்தியடிகளுக்கு மனம் வராது. தமக்கு வரும் கடிதங்களின் மேல் உறைகளை எடுத்து வைத்துக் கொள்வார். அவற்றைப் பிரித்து, உட்புறம் எழுதாமல் இருக்கும் இடத்தில் குறிப்புகள் எழுதி நண்பர்களுக்கு அனுப்புவார். "தங்கள் கடிதங்களை நாங்கள் பத்திரமாகப் போற்றி வைத்துக் கொள்ள விரும்புகிறோம். இந்த மாதிரி காகிதத்தில் தாங்கள் எழுதுகிறீர்களே" என்று சிலர் இவரிடம் வருத்தம் தெரிவித்தார்கள்.

"கடிதம் தான் முக்கியம். காகிதம் அல்ல. அதிலுள்ள செய்தி உங்களுக்குத் தெரிந்த பிறகு அந்தக் காகிதத்துக்கு என்ன வேலை?" என்று கேட்டார் காந்திஜி.

- என். ஜரினா பானு,
திருபட்டினம்

மரங்கள் புகார் சொல்லுமா?



• பிக்காஸோ

புகார் சொல்லாது

சர்ச்சில் ஓர் ஓவியரும் கூட. ஓய்வு நேரத்தில் அவர் ஒரு நாள் சித்திரம் தீட்டிக் கொண்டிருந்தபோது, "நீங்கள் ஏன் இயற்கைக் காட்சிகளை மட்டும் தான் வரைகிறீர்கள்?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"அதற்குக் காரணம் இருக்கிறது. தன்னை அழகாக வரையவில்லை என்று எந்த ஒரு மரமும் புகார் சொல்லாது அல்லவா?" என்றார் சர்ச்சில்.

- முருகேசன்,
தேனி

ஏரியும் சேரியும்

ஒரு விழாவில் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களும், கவியோகி சுத்தானந்த பாரதி அவர்களும் கலந்து கொண்டார்கள். கவிமணி அவர்கள் உரையாற்றும்போது, "எனக்கும், சுத்தானந்தபாரதி அவர்களுக்கும் இவ்வளவு நெருக்கமான நட்பு இருப்பதைக் கண்டு சிலர் வியப்படையலாம். பொதுவாக எங்கள் இருவருக்கும் பல காரியங்களில் நிறையப் பொருத்தம் உண்டு. உதாரணமாக எங்கள் ஊர்களைத்தான் பாருங்களேன். 'எனக்குப் புத்தேரி, அவருக்குப் புதுச்சேரி" என்று கூறினார். அடுத்து சுத்தானந்த பாரதியார் பேசும்பொழுது, "கவிமணி அவர்கள் கூறும்போது தனக்குப் புத்தேரி என்றும் எனக்குப் புதுச்சேரி என்றும் குறிப்பிட்டார்கள். உங்களுக்கெல்லாம் ஒன்று நன்றாகத் தெரியும். சேரி செழிக்க வேண்டுமானால், ஏரி அவசியம் அல்லவா? இந்தப் புதுச்

சேரியின் செழுமைக்கு அந்தப் புத்தேரியே காரணம்" என்றதும் கூட்டத்தில் ஆரவாரம்.

- அ.பேச்சியப்பன்,
ராஜபாளையம்

என்ன விலை?

புகழ்பெற்ற பிக்காசோவின் ஓவியம் என்று கூறி ஒரு படத்தைப் பெரும் தொகைக்கு விற்று விட்டார் ஒருவர். சில நாட்கள் கழித்து வாங்கிய வருக்குச் சந்தேகம் வந்தது. உண்மையிலேயே அது பிக்காசோவின் ஓவியம்தானா என்று.

பிக்காசோவிடமே அதை எடுத்துச் சென்றார். "இது நீங்கள் தீட்டியதுதானே?" என்று கேட்டார்.

பிக்காசோ நேரடியாகப் பதில் சொல்லாமல் "என்ன விலைக்கு வாங்கினீர்கள்?" என்று கேட்டார்.

"ஒரு லட்சம் டாலருக்கு."

"அப்படியானால் நான் தீட்டியதாகத்தான் இருக்கும். வேறு யாருடைய ஓவியத்துக்கும் அவ்வளவு விலை தரமாட்டார்கள்" என்றார்!



• சர்ச்சில்

உலகம்

உள்ள வரை...

ஒரு சமயம் நெப்போலியனை மதகுரு ஒருவர் சந்தித்தார்.

"சாம்ராஜ்ய ஆசை கொண்டு ஊர் ஊராக அலைகிறாயே! நீ இறந்து போன பின்பு உன்னுடைய சாம்ராஜ்யங்கள் உன்னுடையவையாக இருக்கப் போவதில்லையே" என்றார்.

"சாம்ராஜ்யம் என்னுடையதாக இருக்காது. ஆனால் சாம்ராஜ்யங்களை எப்படி அமைக்க வேண்டும் என்ற என் எண்ணமும், அதன் காரணமாக எழுந்த வீரமும், அந்த வீரத்தினால் எழுந்த புகழும் இந்த உலகம் உள்ளவரை என்னுடையதாக இருக்கும்" என்று பெருமிதத்துடன் பதில் சொன்னார் நெப்போலியன்.

- என். நாசர், திருப்பட்டினம்

எளிமையே பெருமை!

மின்சார மோட்டார், மின்சார ஜெனரேட்டர் ஆகியவற்றின் தந்தை என்று அழைக்கப் பட்டவர் விஞ்ஞான மேதை மைக்கேல் ஃபாரடே. எளிமையான ஆடைகளை அணிந்து கொண்டு தான் அவர் ஆய்வுக் கூடத்திற்குப் போவார்.

ஒரு நாள் ஆய்வுக் கூடத்தைப் பார்வையிட வந்த ஓர் உயர் அதிகாரி மிகவும் எளிய உடையோடு காணப்பட்ட ஃபாரடேயைப் பார்த்து முகத்தைச் சுளித்தவாரே, "யாரய்யா நீர்?" என்று கேட்டார்.

ஃபாரடே அடக்கமாகப் பதில் சொன்னார், "நான் இந்த ஆய்வுக் கூடத்தில் வேலை செய்கிறவன்."

"அப்படியா? எவ்வளவு காலமாக இங்கே வேலை செய்கிறாய்?" என்றார் அந்த அதிகாரி.

"கடந்த பல ஆண்டுகளாக நான் இங்கே வேலை செய்து வருகிறேன்" என்று பதில் சொன்னார் ஃபாரடே.



• நெப்போலியன்

"பல ஆண்டுகளாக வேலை செய்கிறேன் என்கிறாய். நல்ல ஆடைகளை வாங்கி அணியக் கூட உனக்கு வசதி இல்லையா? இங்கே உனக்குச் சரியாகச் சம்பளம் கொடுப்பதில்லையா?" என்றார் அதிகாரி.


"இல்லை... இல்லை... அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. சம்பளமெல்லாம் நிறையவே கொடுக்கிறார்கள்" என்றார் ஃபாரடே.

அதைக் கேட்ட அந்த அதிகாரி சற்று ஏளனமாக, "சரி...சரி.. உன் பெயர் என்ன? என்று கேட்டார்.


"என் பெயர், மைக்கேல் ஃபாரடே!" என்றார். அதைக்கேட்ட அந்த அதிகாரி வியப்பில் விழிபிதுங்கி நின்றார். ஃபாரடேயிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

- மு. பெரியசாமி
விட்டுக்கட்டி

கிறிஸ்துமஸ் தாத்தாவுக்கு வழி காட்டுங்கள்!



ஜோடி சேருங்கள்





ஓர் அகப்பை மாவில் ஊருக்கே பந்தி!

I. 1. ஓர் அகப்பை மாவாலே ஊருக்கே பந்தி வச்சேன் - அது என்ன?

2. பச்சை பங்களாவிலே, வெண்பட்டு மெத்தையிலே, கறுப்புத் துரை தூங்கு கிறார்- அது என்ன?

3. மேலேயும் கல் கட்டடம், கீழேயும் கல் கட்டடம், நடுவிலே போகிறது ஊற்றுக் கால்வாய் - அது என்ன?

- வே. சுபஸ்ரீ, பதினோராம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, நல்லூர்

II. 1. கழுத்தை அறுத்தால் கண்கள் விழிக்கும் - அது என்ன?

2. கறுப்பு மாமா பச்சைக் குடை பிடிக் கிறார் - அவர் யார்?

3. சின்னவன் கறுப்பு, பெரியவன் வெள்ளை - அவன் யார்?

4. பெட்டியைத் திறந்தால் கிருஷ்ணன் பிறப்பான் - அது என்ன?

- மு. சுகன்யா, ஏழாம் வகுப்பு, சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்

III. 1. சொன்னதையே சொல்வான் - அவன் யார்?

2. வெளிச்சத்தில் உடன் வருபவன் இருட்டில் வரமாட் டான் - அவன் யார்?

3. ஆயிரம் அறை, அத்தனை யும் இனிப்பறை - அது என்ன?

4. வாலில் ஆயுதம் வைத்து பய முறுத்துவான் - அது என்ன?

- அ. பத்மகுமார், பத்தாம் வகுப்பு, அரசு மேல் நிலைப் பள்ளி, நல்லூர்

IV. 1. இழுத்துப் பிடித்தால் எழுந்து பறப்பான், விட்டுவிட் டால் விழுந்து விடுவான் - அவன் யார்?

2. காலால் நீர் உறிஞ்சி தலையால் தாகம் தணிப்பான் - அவன் யார்?

3. இந்த டாக்டர் போடும் ஊசிக்கு வேறொரு டாக்டருக்குப் பணம் தரவேண்டும் - அவன் யார்?

- ஆர்.ஏ.ஜெயந்த் பாலாஜி, ஆறாம் வகுப்பு, சக்தி மெட்ரிக் பள்ளி, செட்டிபாளையம்

V. 1. அம்மா சுடாத தோசை, யாரும் திங்க முடியாத தோசை - அது என்ன?

2. நடு வீட்டில் உட்கார்ந்து கொண்டு நம்மை அழவைப்பான், சிரிக்க வைப்பான், கோபப்பட வைப்பான் - அவன் யார்?

3. வண்ண வண்ண மிட்டாய், வைத்தி யர் கொடுக்கும் மிட்டாய் - அது என்ன?

- ஏ. கவின் குமார், ஐந்தாம் வகுப்பு, புனித அமலா அன்னை மெட்ரிகுலேசன் பள்ளி, ஈரோடு

விடைகள் :

I. 1.சுண்ணாம்பு 2. கொடுக்காய்ப்புளி 3. நாக்கு

II. 1. நுங்கு 2. பனைமரம் 3. தலைமுடி 4.நிலக்கடலை

III. 1.எதிரொலி 2. நிழல் 3. தேன் கூடு 4. தேள்

IV.1. பட்டம் 2. தென்னை மரம் 3. கொசு

V. 1. நிலா 2.தொலைக்காட்சி 3. மாத்திரை



சக்குவாய் வந்த சக்கரபாணி!

ஆர்.பொன்னம்மாள்

சிஞ்சிருணிபுரம் என்ற ஊரில் கங்காதரன் - கமலா இருவருக்கும் மகளாகப் பிறந்தவள் சகுந்தலா. பெற்றோர் அவளைச் சக்கு என்று செல்லமாக அழைத்தனர். சிறு வயது முதலே பெற்றோரைப் போல் பெருமாளிடம் அதிக பக்தி கொண்டிருந்தாள் சக்கு. பஜனைகளில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அதிகம்.

உரிய வயது வந்ததும் மித்ரு என்ற வாலிபனுக்கு அவளை மணமுடித்து அனுப்பினர். மித்ருவின் தாயும், தமக்கையும் சக்குவை அதிக வேலை வாங்கிக் கொடுமைப்படுத்தினர்.

குளத்தில் தண்ணீர் முகர்ந்து வந்த சகுந்தலாவின் எதிரே கபீர்தாஸ், நாமதேவர், ராமதாஸர் ஆகிய பெரியோர்கள் பெரிய கோஷ்டியோடு பஜனை செய்து கொண்டு வருவதைக் கண்டாள். குடத்தை ஒரு பக்கமாக இறக்கி வைத்துவிட்டு அவர்களை நமஸ்கரித்தாள். தானும் அவர்களோடு வர அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டாள்.

''அம்மணி! நாங்கள் ஏகாதசி தரிசனம் பெற பண்டரிபுரம் போகிறோம்! தாங்கள் கணவர் உத்தரவு பெற்று வருவதே முறை'' என்று சொல்லிவிட்டனர்.

விரைந்து வீட்டிற்கு வந்தவள் கணவனிடம் அனுமதி கேட்டாள்.

''அவர்களுக்குக் குடும்பக் கடமைகள் முடிந்துவிட்டது. க்ஷேத்ராடனம் செல்கிறார்கள். நீ போய்விட்டால் இங்கே உள்ள வேலைகளை யார் செய்வார்கள்? கோதுமை மாவு தீர்ந்துவிட்டது. திரித்து வை'' என்று கடுப்போடு உத்தரவிட்டான்.

''முடியாது. வேலை செய்து செய்து, என் கைகள் காய்த்து விட்டதைப் பாருங்கள். இடிக்கவும், திரிக்கவும், புடைக்கவும், பாத்திரம் தேய்க்கவும், வீடு கழுவவும்தானா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்தீர்கள்? எனக்கு நல்லது, கெட்டது கிடையாதா? ஏகாதசி உற்சவத்திற்கு அனுப்பவில்லையென்றால் இனி மேல் நான் எந்த வேலையும் செய்ய மாட்டேன்'' என்று பிடிவாதம் பிடித்தாள்.

''இவளுக்கு எத்தனை கொழுப்பு பார்த்தியா? இவளை அடக்கி வைக்கலேன்னா உனக்குத்தான் அவமானம்'' என்று தமக்கை சொல்ல, அவளை நையப்பு

டைத்து ஓர் அறையில் தள்ளி அங்கிருக்கும் தூணில் கட்டி வைத்தான்.

சக்குபாய் விம்மி விம்மி அழுதாள்.

"பகவானே! உன் தரிசனம் பெற முடியாத அளவுக்கு நான் அத்தனை பெரிய பாவியா? என் மாமியார், நாத்தனார், கணவன் இவர்களுக்கு உன்னைக் காண வேண்டும் என்ற ஆவலை நீ நினைத்தால் ஏற்படுத்த முடியாதா? என் மனதில் மட்டும் பக்தியை விதைத்து இந்த நாஸ்திகர்களிடம் அனுப்பியது உனக்கொரு விளையாட்டா?" எனப் புலம்பினாள்.

அடியார்கள் வேதனைப் படுவதை ஆண்டவன் பொறுப்பானா? அவளைப் போலவே உருவெடுத்து வந்து அவள் கட்டுகளை அவிழ்த்தார். சகுந்தலாவின் தியானம் கலைந்தது.

"நீ யார்? என்னைப் போலவே இருக்கிறாயே, என் புகுந்த வீட்டாருக்கு நீ உறவா? அவர்களே உன்னை அனுப்பினார்களா?" என சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தாள்.

'உஸ்' என்று வாயில் கை வைத்து சைகை செய்த பகவான், "அனாவசியமாகக் கேள்விகளைக் கேட்டு நேரத்தை வீணடிக்காதே! பாகவத கோஷ்டி குளத்தங்கரை அருகே போகிறது. போய் கலந்து கொள். நீ வரும் வரை உன்னைப் போலிருக்கும் நான், இங்கு சகுந்தலாவாக இருக்கிறேன். என்னைக் கட்டிப் போட்டு, அறையைப் பூட்டு. தூங்கும் உன் கணவனின் தலையணைக்கு அடியில் சாவியை வை. விரைந்து செயல்படு" என்று ஊக்கினார்.

தயங்கியபடியே அவளைக் கட்டிய சகுந்தலா, "எனக்கு உதவுவதால் உனக்கென்ன லாபம்?" என்று கேட்டாள்.

பரந்தாமன் புன்முறுவலுடன், "இப்படி கணக்குப் பார்த்தால் உலகத்தில் இரக்கம் என்ற குணம் தொலைந்தே போய்விடும். பயப்படாதே! என்னை நம்பு. ஐயோ பாவம்... கஷ்டப்படுகிறாயே என்று வந்தால் இத்தனை மடக்குகிறாயே" என்று கேட்டார். சகுந்தலா கதவைப் பூட்டி சாவியைப் கணவன் தலைப்பக்கம் போட்டுவிட்டு, ஓடிச் சென்று பஜனைக் குழுவினரோடு சேர்ந்து கொண்டாள்.

அதன்பின் அவள் ஊரை மறந்தாள். குடும்பத்தை மறந்தாள். கபீர்தாஸர், சக்கு மெய் மறந்து பஜனை செய்வதைக் கவனித்து, 'என்ன நடந்திருக்கும்' என்று ஞான திருஷ்டியில் பார்த்தார்.

பகவான் இவள் வடிவத்தில் கட்டுண்டிருப்பது தெரிந்தது. 'அன்று கண்ணனை யசோதை கட்டிப் போட்டாள். இன்று இவள் கையில் கட்டப்பட்டிருக்கிறார். அப்படியானால் இவள் பக்தி எத்தனை உயர்வானதாக இருக்க வேண்டும்' என்று மெய் சிலிர்த்தார்.

பண்டரிபுரம் சென்றதும் அனைவரும் பீமாநதியில் நீராடி, பாண்டுரங்கன் சன்னதி சென்று அற்புதமாகப் பஜனை செய்து வழிபட்டனர்.

சகுந்தலாவின் வீட்டில் மித்ரு திடுக்கிட்டு விழித்தான். "இதென்ன? அவளை அடித்து விட்டு நான் அயர்ந்து போய் தூங்கிவிட்டேன்? அட, உள்ளேயிருந்து ஒரு சத்தத்தையும் காணோமே! கத்திக் கத்தி தொண்டை வறண்டிருக்கும். புத்தி வந்ததா என்று பார்க்கலாம்" என்று எழுந்தவன், அதைப் பற்றித் தாயாரின் யோசனையைக் கேட்கலாமென்று பின்பக்கம் இருந்த அன்னையிடம் சென்றான்.

நடந்தது எதுவும் அறியாமல் அவர்களும்

உயர்ந்த பேனா!

உலகிலேயே விலை உயர்ந்த பேனா 2001ம் வருடம் ஜனவரியில் ஸ்வீடன் நாட்டில் தயாரிக்கப்பட்டது. இதில் 4255 வைரக் கற்கள் சுற்றிப் பதிக்கப்பட்டிருந்தது. இதன் மதிப்பு ஒரு லட்சத்து இருபதாயிரம் டாலர்கள்.

- எஸ். மோகன்ராஜ்





தூங்கி வழிந்தனர். அவர்களை உசுப்பி எழுப்பிக் கொண்டு வந்து கதவைத் திறந்தான் மித்ரு. பகவான் சோர்ந்து கிடப்பதாய் பாவனை செய்தார்.

"ஏ சக்கு, புத்தி வந்ததா? ஒழுங்காக வேலை செய்வாயா?" என்று அதட்டினான் மித்ரு.

தலையை அசைத்து ஒப்புதல் அளித்தார் பகவான். கட்டை அவிழ்த்து விட்டான் மித்ரு.

சமையல் சாமான்களைத் தொட்டதும் சமையலாகிவிட்டது. 'என்ன ருசி, என்ன ருசி' என்று புகழ்ந்தபடியே குடும்பத்தார் சாப்பிட்டனர். மூட்டை தானியமாக இருந்தாலும் பகவான் பார்வை பட்டதும் மாவாகி விட்டது. பாத்திரங்களெல்லாம் தானே துலக்கிக் கொண்டு பளபளப்பாயின. துணிகளெல்லாம் தானே துவைத்துக் கொண்டு கொடியில் ஏறின.

"சக்கு, எனக்கு எண்ணெய் தேய்த்து விடு" என்று அதிகாரம் செய்தாள் தமக்கை. பகவான் ஒரு கை எண்ணெயை எடுத்து அவள் தலையில் வைக்கவும் அவளுக்கு ஞானம் பிறந்தது.

"அம்மா! தப்பெல்லாம் என் மேல்தான்! என் புருஷன் வீட்டில் எல்லோரும் நல்லவர்கள். இங்கே நாம் சக்குவை அடிமை போல் நடத்துகின்றோம்! அவள் பொறுமையாய் இருக்கிறாள். புருஷன் வீட்டில் அடங்கி வாழத் தெரியாத நான் அவளை அதிகாரம் பண்ணுவது எந்த விதத்தில் நியாயம்? இனி மேலும் வாழா வெட்டி என்கிற பேரிலே நான் இங்கே தண்டச் சோறு சாப்பிட விரும்பவில்லை என்று சொல்லி விட்டு, புக்ககம் சென்று விட்டாள்.

"ஏ... சக்கு, காலைப் பிடித்து விடு" என்று அதட்டிய மித்ருவின் தாய், பகவான் கை பட்டதுமே, 'இவளைப் பாடாய் படுத்துகிற பாவம்தான் என் பெண் வாழா வெட்டியாய் இருந்தாள். இனிமேலாவது அவள் நல்ல பெயர் எடுக்கட்டும். மித்ருவிடம் சொல்லி தீர்த்தயாத்திரை போக வேண்டும். மனுஷாளுக்கு மனுஷாள் காலைப் பிடிக்கிறதாவது' என்ற நல்லபுத்தி உதயமானதால், அவளும் திருந்தி பூஜை, கோயில் என்று பக்தி வழியில் நேரத்தைச் செலவிட்டாள்.

மித்ருவும் 'பாவம், நம்மை நம்பி வந்த பெண், பண்டரிபுரம் போக வேண்டுமென்று தானே ஆசைப்பட்டாள். அதற்கு அவளை அடித்துக் கட்டிப் போட்டோமே' என்று மனம் உருகி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். வீடே மாறிவிட்டது.

சக்குவுக்கோ வீட்டுக்குத் திரும்பும் எண்ணமேயில்லை! பகவான் ஆதிசேஷனை நினைத்தார். சக்கு நந்தவனத்தில் பூப்பறிக்கும்போது ஆதிசேஷன் நாகமாக வந்து அவளைத் தீண்ட, சக்கு மயங்கி விழுந்தாள்.

வைத்தியராக வந்த பகவான் பச்சிலைச் சாற்றைப் பிழிந்து அவளைக் குணமாக்கினார். அவளிடம் "அம்மா, உதவி செய்தவர்களை மறப்பது தவறு. உன் புகுந்த வீடு சென்று உன் கடமையைச் செய்" என்று அறிவுரை கூறியதோடு, அவள் ஊரின் குளக்கரை வரை துணையாகவும் வந்தார்.

"எப்படி வீட்டுக்குள் போவது? இருவரையும் ஒரே சமயத்தில் பார்த்தால் குழப்பமேற்படுமே" என்று கலங்கிய சக்குவிற்கு, "பேஷ்! என்னைப் பிணைக் கைதியாக விட்டு விட்டு நீ குஷியாக இருந்து விட்டாயே!" என்ற குரல் தூக்கி வாரிப் போட வைத்தது. திரும்பிப் பார்த்தாள். தான் கட்டிப் போட்ட பெண் குடத்தோடு இறங்கி வருவதைக் கண்டாள்.

கண்ணீர் பெருக அவள் கால்களில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினாள். அவள் வணங்கிய பாதங்கள் பெரியதாக விரிய, வியப்போடு நிமிர்ந்தாள். சங்கு, சக்கரதாரியாகப் பகவான் காட்சி அளித்தார்.

"பக்தையே! இல்லறமே நல்லறம்! கணவனிடம் அன்பாக நடந்து கொள்" என ஆசீர்வதித்து மறைந்தார் பகவான்.


'தனக்காக பகவானல்லவா வந்திருக்கிறார்!' என்ற பிரமிப்பு நீங்காமலே குடத்துடன் வீட்டுக்குள் நுழைந்தாள் சகுந்தலா. "சக்கு! உன் விருப்பப்படி அடுத்த ஏகாதசிக்கு நாமெல்லாம் பண்டரிபுரம் போகலாம் என்று அம்மா சொல்லிவிட்டாள். இப்போ சந்தோஷம்தானே" என்று மித்ரு கேட்கவும், 'எல்லாம் அவன் திருவிளையாடல்' என மகிழ்ந்தாள் சக்கு.

பிரஸ்

ஆரம்ப காலங்களில் மர எழுத்துகளைச் செய்து அவற்றின் மீது மை தடவி அதைத் தாளின் மீது வைத்து அழுத்துவார்கள். அப்படி அழுத்துவதை பிரஸ் செய்தல் என்பர். பிரஸ் என்ற அந்தச் சொல்தான் அச்சகங்களுக்கு பிரஸ் என்ற பெயர் வரக் காரணம் ஆயிற்று!

— பி. சுசீலா





எரிபொருள் சேமிப்பு விளையாட்டு
ஐ.எஸ்.ஐ. தர அடுப்பு. 25% எரிபொருள் சேமிக்கும் வெற்றிக்குச் செல்லவும்.
15
16
17
18
14
குளிர்ச்சியான பொருட்கள் அதிக எரிபொருளை செலவிடும். ஓர் ஆட்டம் தவிர்க்கவும்
13
குடும்பத்தில் அனைவரும் ஒரே நேரத்தில் சாப்பிட்டால் எரிபொருள் மிச்சம். நீங்களே இன்னொரு முறை ஆடவும்.
12
11
10
9
8
7
6
அழுக்கான பர்னர். மஞ்சள் நிற ஜ்வாலை. ஆரம்பத்துக்குச் செல்லவும்.
5
4
3
2
1
ஆரம்பம்
சிறிய பர்னர் பெரிய பர்னரைவிட 10% குறைவாக எரிபொருள் செலவிடும். 4க்குச் செல்லவும்.
save me
தேவையானவை : தாயக்கட்டை, வண்ண பட்டன்கள்
2 முதல் 4 பேர் வரை விளையாடலாம். தாயம் போட்டு ஆரம்பிக்கவும்.



DO YOU KNOW?
75% of the earth is water. But most of it is not potable.
Still would you let it go waste ?
Children,
Be an active participant in PCRA's conservation mission.
Remember, conservation leads to a beautiful tomorrow.
Write a slogan on Water Conservation and win free book
I save water because
Name :
Age :
School :
Class
Address :
Ph :
PETROLEUM CONSERVATION RESEARCH ASSOCIATION



கோபம் என்ற பகைவன்...

“அம்மா... அம்மா கொஞ்சம் சீக்கிரம் வாங்க” என்று கத்தினான் நரேன்.

“என்னடா வேணும்? எனக்கும் வேலை இருக்கு, சீக்கிரம் சொல்.”

“என்னோட பேனா எங்கே?”

“உன் பேனாவை நான் ஏன் எடுக்கப் போறேன்; இங்கதான் இருக்கும். நல்லா தேடிப் பாரு.”

“இன்னிக்கு எனக்கு கிளாஸ் டெஸ்ட். ரொம்ப ராசியான பேனா. அது இல்லைன்னா எனக்குப் பயங்கர கோபம் வரும்” என்று எச்சரித்தான் நரேன்.

“ஏற்கனவே கோபத்துலதான் இருக்கே. புதுசா வேற வரணுமா? பூமா... நரேன் பேனாவைப் பார்த்தியா? சீக்கிரம் தேடிக் கொடு” என்று சொல்லிவிட்டு அம்மா வேலையில் மூழ்கினார்.

“அம்மா, நரேனுக்குக் கோபம் வரும்னு எல்லோருக்கும் தெரியும். நான் அவன் சம்பந்தப்பட்ட எந்த விஷயத்திலும் தலையிடறதே இல்லை. நீங்க சொன்னதுக்காக வேணும்னா தேடித் தரேன்” என்றவள் வேகமாக அங்கும் இங்கும் தேடினாள்.

ஒரே நிமிடத்தில் நரேன் பேனாவை எடுத்துக் கொடுத்தாள்.

“எங்கேயாவது போட்டுட்டு, வீட்ல இருக்கிறவங்க மேல கோபப்படுறதே உன் பிழைப்பாப் போச்சு” - பூமா.

“நீதான் பேனாவை எடுத்திருக்கேன்னு தெரியுது. நான் இவ்வளவு நேரம் தேடியும் கிடைக்கலை. நீ கரெக்டா எடுத்துட்டியே... அப்ப நீதான் எழுதிட்டுப் போட்டிருக்கே” என்று கடுகடுத்தான் நரேன்.

“எங்கிட்டேயும் பேனா இருக்கு. உன் குணம் தெரிஞ்சும் எடுப்பேனா? கோபத்துல நீ இருந்ததால, கண் முன்னால உள்ள பொருள்கூட தெரியலை. கோபம் உன் கண்ணை மறைச்சிருச்சு” என்றாள் பூமா.

அப்போது “நரேன் இருக்கானா?” என்றபடி வீட்டுக்குள் நுழைந்தான் விவேக்.

விவேக்கைப் பார்த்ததும் முகம் கொடுத்துப் பேசாமல் விருட்டென்று தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான் நரேன்.

நரேனின் அம்மா விவேக்கிடம் காரணத்தை விசாரித்தார்.

“ஆன்ட்டி, நேற்று எங்க பள்ளிக்கூடத்துல கபடி விளையாடினோம். நரேனும் நானும் எதிர் எதிர் அணியில் இருந்தோம். சுவாரசியமான இறுதிக்கட்டத்தில், நரேன் சட்டையைப் பிடித்து இழுத்து நான் அவுட்டாக்க, எங்க டீம் ஜெயிச்சுது. அவுட்டாக்கினதுல அவனுக்குக் கோபம் இல்லை. சட்டையைப் பிடித்ததுதான் கோபம். நேற்றே மன்னிப்புக் கேட்டுட்டேன். அப்படியும் கோபமா இருக்கான்.”

“நல்லா படிக்கிறான், விளையாடறான், உதவுற குணம் எல்லாம் இருக்கு. இந்தக் கோபம்தான் அவனுக்கு எதிரின்னு ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கிறானோ... நீ கவலைப் படாதே! சாயந்திரம் வந்து பேசுவான்” என்றார் நரேனின் அம்மா.

“ஆன்ட்டி, இந்தக் கோபத்தால அவன் கிளாஸ் லீடர் பொறுப்பிலிருந்து விலக வேண்டியதாச்சு. என் நண்பன்கிறதால நான் அவன் கோபத்தைப் பொறுத்துக்கறேன். மற்றவங்ககிட்ட எல்லாம் கெட்ட பேர் சம்பாரிச்சிருக்கான். டைம் ஆகுது, வரேன் ஆன்ட்டி” என்றபடி கிளம்பினான் விவேக்.

நரேன் அம்மாவுக்கும் தங்கைக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை.

கோபம் என்ற குணத்தைக் காட்டிலும் கொடிய பகைவன் உண்டா?

இதை உணர்த்தும் குறளைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

நகையு ________ ________ சினத்
பகையு ________ பிற

- தம்பிப்பயல்

பள்ளி மாணவர்களுக்கு மிகவும் உதவக்கூடிய போட்டி இது. இதில் பங்கேற்பது மிகவும் சுலபம். சரியான விடைகளைக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும். முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட



1000/- ரூபாய் பரிசு!

வேண்டும். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 20.12.2003.

இந்த மாதப் போட்டி

பொருத்துக:

1. ஹோமர்	– சுர்ணம் மல்லேஸ்வரி
2. பிஸ்மில்லாகான்	– நீண்ட கால முதல்வர்
3. கேல் ரத்னா	– இந்திரப்பிரஸ்தம்
4. ஜோதிபாசு	– ஷெனாய் இசை
5. பாண்டவர்கள்	– இலியட், ஒடிஸி
6. கண்வர் முனிவர் மகள்	– சகுந்தலை

7. பட்டுமேல் பட்டுடுத்திப் பதுங்கி நிற்கிறாள் சிட்டு – அது என்ன?

8. மேலே உள்ள படத்தில் இருப்பது என்ன பறவை?


ஆசிரியர்,
கோகுலம்,
47. N.P. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97.





முதல் பரிசு:
எஸ். ஸ்ரீவித்யா, எட்டாம் வகுப்பு,
நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்.

இரண்டாம் பரிசு:
கோ. அருண்குமார், பதினோராம் வகுப்பு,
சூளைமேடு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி,
நுங்கம்பாக்கம், சென்னை.



மூன்றாம் பரிசு:
பா. சாய்சங்கர்,
ஆறாம் வகுப்பு,
புனித அன்னம்மாள்
மேல்நிலைப் பள்ளி,
சென்னை.



ஆறுதல் பரிசு:
சு. வரலக்ஷ்மி, ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக்கோட்டை,
விழுப்புரம் மாவட்டம்.



ஆறுதல் பரிசு:
எஸ். சுஷில்,
எட்டாம் வகுப்பு,
பி.ஆர். சித்தாநாயுடு
மெமோரியல்
மெ.பள்ளி,
சித்தாபுதூர்,
கோவை மாவட்டம்

வண்ணத்தூரிகை முடிவு

நவம்பர் இதழில் 'ஆடுகள்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். வந்து குவிந்த ஆடுகளில் பரிசு பெற்ற ஆடுகள் இங்கே அணிவகுத்துள்ளன.



சிலேடைச் சாமியார்!

பேச்சியப்பன்

சஞ்சீவி மலையடிவாரத்தில் உள்ள குகையில் சாமியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரிடம் ஆசி வாங்க தினமும் எண்ணற்ற பக்தர்கள் வருவார்கள்.

அவர் இறையருளோடு நாவன்மை மிகுந்தவராகவும் திகழ்ந்தார். குறிப்பாக, சிலேடையாகப் பேசுவதில் வல்லவர் அவர். எனவே மக்கள் அவரை அன்புடன், 'சிலேடைச் சாமி' என்று அழைத்தனர்.

சிலேடைச் சாமியை நெருங்கிய பக்தர் ஒருவர் அவரது காலில் விழுந்து வணங்கினார். அவரை ஆசீர்வதித்த சாமியார் அவரிடம்,

''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார்.

''அமைதியான வாழ்க்கை''- பக்தர்.

''அமைதியான வாழ்க்கை'' என்று சாமியாரும் சொல்ல, நாம் சொல்லியதையே இவரும் ஏன் கூறுகிறார் என்று மனம் குழம்பினார் பக்தர். சிறிது நேரம் ஆழமாக யோசித்த போதுதான் சாமியார் கூறியதின் பொருள் புரிந்தது. அதாவது அமைதியான வாழ்க்கை வேண்டுமென்றால் அமைத்துக் கொள் தியான வாழ்க்கையை என்பதையே அமை. தியான வாழ்க்கை என்று கூறியிருக்கிறார்.



சாமியாரிடம் ஒரு விவசாயி வந்தார். அவர் மிகவும் கலங்கியவாறு, ''எனக்குச் சொந்தமாகப் பத்துப் பசுமாடுகள் இருக்கின்றன. அவை தினமும் என் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள காட்டில் தானாகவே மேய்ந்து விட்டுத் திரும்பி விடும். வழக்கம் போல நேற்று மேயப் போன மாடுகள் இன்னமும் வீடு திரும்பவே இல்லை. காட்டுக்குள் சென்று தேடிப்பார்த்தும் ஒரு மாடு கூட தென்படவில்லை. அவை திரும்பி வந்தால்தான் எனக்கு வாழ்வு. இல்லையென்றால் என் நிலை கேள்விக்குறியாகி விடும். தாங்கள் அருள் புரிந்து என் மாடுகள் திரும்பக் கிடைக்கச் செய்ய வேண்டும்'' என்று கண்ணீர் வடித்தார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு விபூதியை எடுத்துக் கொடுத்து, ''இன்று சூரியன் மறைவதற்குள் உன் வீட்டிற்கு ஆபத்து வந்து விடும்'' என்றார்.

இதைக்கேட்டு விவசாயி திடுக்கிட்டார். ''ஏற்கெனவே மாடுகள் தொலைந்து போனதால் நொந்து போய்க் கிடக்கிறேன். இந்நிலையில் என் வீட்டிற்கு வேறு ஆபத்து வரும் என்கிறீர்களே'' என்றவாறு பயந்து நடுங்கினார்.

அதற்குச் சாமியார் லேசாகப் புன்னகைத்தவாறே, ''ஆ' என்றால் பசு. 'ஆ'பத்து



என்றால் பத்து பசுக்கள். உன்னுடைய 'ஆ'பத்தும் இன்று வீடு திரும்பி விடுவதாகக் கூறினேன்'' என்றார்.

ஒரு முறை சாமியாரிடம் ஆசி பெற வெளியூர் பக்தர்கள் ஐந்து பேர் வந்திருந்தனர். அவர்கள் குகைக்குள் நுழையும் போது, முதலாவதாகக் குகைக்குள் நுழைய முற்பட்டவர் நிமிர்ந்தவாறே செல்ல, குகைச் சுவரில் அவரது நெற்றி முட்டி, லேசாக வீங்கியது.

அதைக் கண்டு சுதாரித்துக் கொண்ட மற்ற நால்வரும் எச்சரிக்கையாகக் குனிந்து சென்றதால், அவர்களுக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை.

சாமியார் முன்பு ஐவரும் வணங்கி நின்றனர். முதலாமவர் சுவரில் முட்டிய வலியால், தலையை அடிக்கடி தடவிக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.

அதைக் கவனித்த சாமியார் மற்ற நால்வரையும் பார்த்து, ''நீங்கள்தான் முட்டாள்களோ?'' என்றார். நால்வரும் இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர்.

அவர்களில் ஒருவர், ''சுவாமி, முதலில் வந்தவர்தான் குகைக்குள் போகிறோம் என்ற அறிவில்லாமல் குகைச் சுவரில் முட்டி விட்டார். நாங்கள் புத்திசாலித்தனமாகக் குனிந்து வந்ததால் காயமின்றித் தப்பினோம். நீங்கள் எங்களை ஏன் முட்டாள் என்கிறீர்கள்?'' என்று பவ்யமாகக் கேட்டார்.

''நான் அந்த அர்த்தத்தில் கூறவில்லை. முதலில் வந்தவர் முட்டி விட்டார். நீங்கள் நான்கு பேர் மட்டும் முட்டாமல் வந்திருக்கிறீர்கள். நீங்கள் சுவரில் முட்டா ஆட்கள். அதைத்தான் 'முட்டாள்' என்றேன்'' என்றார் சிலேடைச் சாமியார்.

பல ஆண்டுகள் கழித்து சிலேடைச் சாமி முதுமையால் படுக்கையில் விழுந்தார். உணவு எதுவும் உட்கொள்ள இயலவில்லை.

இன்னும் இரு நாட்களில் தனது உயிர் பிரிந்து விடும் என்று அவரே சொல்லி விட்டார்.

உணவு எதுவும் உட்கொள்ள இயலாததால் அவரது பக்தர்கள், பாலை துணியில் நனைத்துக் கொடுக்க முடிவு செய்தார்கள். பசும்பாலை துணியில் நனைத்து அவரது வாயில் பிழிந்தார்கள்.

சாமியார் அதை விழுங்காமல் வெளியே துப்பினார். அப்போது பாலை ஊட்டிய பக்தர், ''என்ன சாமி, பால் கசக்கிறதா?'' என்று கேட்டார்.

''பாலும் கசக்கவில்லை. துணியும் கசக்கவில்லை'' என்று சொன்னார் சாமியார்.

அப்போதுதான் அழுக்குத் துணியில் பாலை நனைத்துக் கொடுத்ததைக் கவனித்தார் பக்தர். உடனே வேறு துணியை மாற்றினார்.





காட்டில் படப்பிடிப்பு


செல்வம் மிகுந்த குள்ளநரி
சினிமா காட்டில் எடுப்பதற்கு
நல்ல நடிகர் நடிகைகளை
நாடி அலைந்து தேர்ந்தெடுத்தார்!

யானைப் பாட்டி கதைசொல்லும்
சிங்கம் வசனம் கர்ஜிக்கும்!
பூனைக் கவிஞர் பாடலுக்கு
வானம்பாடி இசை அமைக்கும்!

குரங்கு இயக்குநர் சுறுசுறுப்பாய்
'சூட்டிங்' எடுக்க இடம்பார்ப்பார்!
பூங்கா நடுவே படப்பிடிப்பு!
'போட்டோ' கரடி ஒளிப்பதிவு!

மேக்கப் கழுகு ஒப்பனையாம்
மின்னும் புறாக்கள் துணைநடிகர்!
காக்கைக் கருடன் லைட்பாய்கள்
கலைமான் படத்தின் தொகுப்பாளர்!

மாஸ்டர் வெண்முயல் நாயகனாம்
மங்கைக் குரங்கு நாயகியாம்!
''பாஸா, பெயிலா?'' படப்பெயராம்
பத்து லட்சம் பணச்செலவாம்!









குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு
சிறுவர் சினிமா எடுத்திட்டார்!
மாஸ்டர் முயலும் நரியாரும்
ஆஸ்கார் பரிசும் வாங்கிட்டார்

வரிகள் விலக்கு அளித்தார்கள்
வாத்தியார் முதல்வர் பரிசளித்தார்
பட்டணம் சென்றனர் கலைஞர்கள்
பாரதப் பிரதமர் வாழ்த்திட்டார்!






பாவை பா.சா. பார்த்தசாரதி

பாலருக்குப் பாதை காட்டியவர்

சார்லி சாப்ளின்

வருடம் 1903. இடம் லண்டன். மேடை நாடகங்கள் மிகப் பிரபலமாக இருந்த கால கட்டம் அது. மாலை நேரத்தை மகிழ்ச்சியாகச் செலவழிக்க நாடகக் கொட்டகைகளுக்கு மக்கள் திரண்டு வந்தார்கள். லண்டனில் ஏராளமான நாடக குழுக்கள். ஓர் அரங்கில் 'ஷெர்லாக் ஹோம்ஸ்' நாடகத்துக்கான ஒத்திகை நடந்து கொண்டிருந்தது. தினசரி ஒரு சிறுவன் ஒத்திகைக்கு வந்து கொண்டிருந்தான். இறுதிக் கட்ட ஒத்திகை அன்று நடந்து கொண்டிருந்தது. மறுநாள் நாடகம். 'பில்லி' என்ற வேலைக்காரன் பாத்திரத்தில் நடித்துக் கொண்டிருந்த சிறுவனுக்குக் காய்ச்சல் என்ற தகவல் வந்தது. பாத்திரம் வேலைக்காரன் என்றாலும், நிறைய வசனம் பேச வேண்டிய முக்கியமான பாத்திரம். தயாரிப்பாளருக்கும், இயக்குனருக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. புதிதாக யாரையும் ஏற்பாடு செய்து தயார் செய்ய முடியாத நிலை. வழக்கமாக வருவது போல அன்றும் வந்திருந்த அந்தச் சிறுவனைப் பார்த்த இயக்குனர், "டேய் தம்பி, நடிக்கிறாயா?" என்று கேட்டார். அந்தக் கேள்விக்காகத்தானே அந்தச் சிறுவன் காத்துக் கொண்டிருக்கிறான்? "யெஸ் சார்" என்றான் சிறுவன். "வசனமெல்லாம் மனப்பாடம் பண்ணணுமே, முடியுமா?" என்று கேட்டார் இயக்குனர். பில்லி பாத்திரத்தின் வசனங்களைக் கட கடவென்று ஒப்பித்தான் சிறுவன். தினசரி கேட்டுக் கொண்டிருந்த வசனங்கள் ஆயிற்றே! "சபாஷ்!" என்று அவனை அணைத்துக் கொண்டார் இயக்குனர்.

மறுநாள் மேடையில் அட்டகாசமாக நடித்து, அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றான் அவன். அப்போது அந்தச் சிறுவனுக்கு 14 வயதுதான். அந்தச் சிறுவன்தான் பின்னாட்களில் சிறந்த சிரிப்பு நடிகராகவும், தயாரிப்பாளர் மற்றும் இயக்குனராகவும் உயர்ந்த சார்லி சாப்ளின். உலகத் திரைப்படச் சரித்திரத்தில் ஒரு சிரிப்பு நடிகர் எண்பதுக்கும் மேற்பட்ட திரைப் படங்களைத் தயாரித்து இயக்கியிருக்கிறார் என்றால், அது சார்லி சாப்ளின் மட்டும்தான். அது மட்டுமா? பதினெட்டுப் படங்களுக்கு அவர் இசை அமைத்திருக்கிறார்.



சார்லி சாப்ளினின் இளம் வயது வாழ்க்கையில் ஏகப்பட்ட இன்னல்கள், இடையூறுகள். அப்பா சிறந்த பாடகர்; மேடை நடிகர். அம்மாவும் அதே போலத்தான். சார்லி சாப்ளினின் முழுப் பெயர் சார்லஸ் ஸ்பென்ஸர் சாப்ளின். அவருக்கு ஒரு சகோதரர். அவர் பெயர் சிட்னி சாப்ளின். சார்லிக்குப் பத்து வயதாகும்போது, தந்தை இறந்து விட்டார். தந்தை இறந்த சில மாதங்களில் தாயும் உடல்நலமில்லாமல் படுத்துவிட, குடும்ப பாரம் பத்து வயது



சார்லியின் தலையில் விழுந்தது. அம்மாவும், அப்பாவும் நாடகத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதால் சார்லிக்கும் இயல்பாகவே நாடக ஆர்வமும், நடிப்பில் பிடிப்பும் இருந்தன. நாடக குழுக்கள் ஒத்திகை நடக்கும் இடங்களுக்குச் சென்று வாய்ப்பு கேட்பதும், அது கிடைக்காத சமயங்களில் அந்தக் குழுக்களில் எடுபிடி பையன்கள் போல் வேலை செய்தும் காலத்தைப் போக்கினார்கள் சார்லி சகோதரர்கள். 'எட்டாவது லங்காஷயர் பையன்கள்' என்ற சிறுவர்கள் நாடக, இசைக் குழுவில் நடனமாடும் வாய்ப்பு சார்லிக்குக் கிடைத்தது. "ஆஹா... இந்தச் சிறுவன் மிக அற்புதமாக நடனம் ஆடுகிறானே" என்று அனைவரும் வியந்தனர். இந்த நிலையில்தான் ஷெர்லாக் ஹோம்ஸ் நாடகத்தில் வேலைக்காரச் சிறுவனாக நடிக்கும் வாய்ப்பு. அதுவே சார்லியின் வாழ்க்கையில் திருப்பு முனை.

சார்லிக்குத் திரைப்பட வாய்ப்பு 1913ம் வருடம் தேடி வந்தது. கீ ஸ்டோன் திரைப்பட நிறுவனத்தில் வாரச் சம்பளத்துக்கு நடிகராக ஒப்பந்தம் போடப்பட்டது. 'தொள... தொள... கால் சட்டை, தலையில் குல்லா, டூத் பிரஷ் மீசை, கையில் பிரம்பு' என்று வித்தியாசமான தோற்றத்தில், திரையில் குடு குடுவென்று ஓடிச் சென்றபடி ஹாஸ்யம் செய்த சார்லியின் படங்கள் கொட்டகை நிறைந்த காட்சிகளாக ஓடின. ஒவ்வொன்றிலும் வித்தியாசமான பாத்திரங்களை ஏற்று நடித்தார் சார்லி. குறிப்பாக 'இரவு ஒரு மணி' என்ற படத்தில் இவர் ஒருவர்தான் படம் முழுவதும் வருவார். வேறு எந்த நடிகர்களும் கிடையாது.

சொந்தமாகப் படங்கள் எடுத்தால் இன்னமும் சுதந்திரமாகவும், பொழுது போக்கும் அம்சங்கள் நிறைந்ததாகவும் வெளியிடலாமே என்ற எண்ணம் தோன்றியது.

ஸ்டுடியோ ஒன்றைக் கட்டினார் சார்லி. அதன்பிறகு வெளிவந்த அவரது 'ஒரு நாயின் வாழ்க்கை' என்ற படம் சிறப்பாகப் பேசப்பட்டது. அந்த நிலையில் முதல் உலகப் போர் மூண்டது. யுத்தச் சூழலை நகைச்சுவையோடு கலந்து அவர் நடித்த சோல்ஜர் ஆர்ம்ஸ் என்ற படம் சார்லியின் புகழை உச்சத்துக்குக் கொண்டு சென்றது. 1921ல் அவர் தயாரித்து வெளியிட்ட 'The kid' என்ற படம் மக்களால் பரபரப்பாகப் பேசப்பட்டது.

1921ம் வருடம் செப்டம்பர் மாதம் ஐரோப்பாவுக்கு அவர் சுற்றுப்பயணம் வந்தபோது அவரை வரவேற்கவும், பார்க்கவும் மக்கள் கூட்டம் அலை மோதியது. "ஹாஸ்ய ரசனை எல்லோருக்கும் இருக்க வேண்டும். நகைச்சுவை உணர்வு கொண்டவன் வாழ்க்கையைச் சுலபமாகச் சமாளிப்பான். அந்த வகையில் மக்களைச் சந்தோஷப்படுத்துவதே என் நடிப்பின் நோக்கம்" என்று மக்கள் தந்த வரவேற்பில் பேசினார் சார்லி சாப்ளின்.

1966ல் மார்லன் பிராண்டோவும், சோபியா லாரனும் இணைந்து நடித்த படம்தான் அவர் தயாரித்த கடைசிப் படம்.


திரைப்படத் துறையில் மட்டுமல்ல, எழுத்துத் துறையிலும் அவர் பின் தங்கியவரல்ல என்பதை நிரூபிக்கும் வகையில், தன்னுடைய வாழக்கையைப் பற்றி நான்கு புத்தகங்களை எழுதியிருக்கிறார் சார்லி.


1977ம் வருடம் கிறிஸ்துமஸ் தினத்தன்று அவரது சிரிப்பு நின்று போனது. லட்சியத்தை விடாமல், முயற்சி மற்றும் கடின உழைப்புடன் செயல்பட்டால், வெற்றி நிச்சயம் என்பதைச் சொல்லுகிறது சார்லி சாப்ளினின் வாழ்க்கை.

- ப்ரியன்

தீமை தோற்கும்!

கதை, படம் : ஆழி





மறுநாள் மாலை, வழக்கமாக முயல் தங்கியிருக்கும் பொந்தின் அருகே வந்தது நரி. அங்கே வெள்ளையாக 'பொசு பொசு' என்று...
முயலைப் பிடிக்கப் பாய்ந்தது நரி...
ஆகா! முயல் பயலே, தூங்குகிறாயா? இன்று என்னிடமிருந்து நீ தப்ப முடியாது!
அங்கே, வெள்ளைத் துணியைப் போர்த்திக்கொண்டு முயல்மாதிரிப் படுத்திருந்த முள்ளம்பன்றியை 'முயல்' என்று நினைத்துக் கவ்வியது நரி...
துணியைப் போர்த்திக் கொண்டிருந்த முள்ளம்பன்றி, சட்டென்று தன் முட்களோடு கூடிய உடம்பைச் சிலிர்த்தது.
..ஆ..ஆ..ஆ..
ஆ..! ஐயோ! முயல் இல்லை; முள்ளம்பன்றி! என் வாயில் முட்கள்... வலி தாங்க முடியவில்லை. இனிமேல் இந்தப் பக்கமே வரமாட்டேன். சதித் திட்டம்..
முள்ளம்பன்றியின் அருகே வந்தது முயல்
நண்பனே, உன் உதவிக்கு மிக்க நன்றி!
தந்திரத்தால்தான் கொடுமையை வெல்லவேண்டும்! ஒன்று தெரிந்து கொள்: எந்தப் பிராணியும் என்னை எதிர்க்க முடியாது!

“நீ தான்

பெயர்?

டீ.வியில் கிரிக்கெட் வீரர்களின் முகத்தைப் பார்த்தால் அவர்கள் எந்த நாட்டுக்காரர்களாக இருந்தாலும் பெயரைச் சொல்லிவிடுவேன்.




உலகக் கோப்பையில் இந்தியா ஆடும் ஆட்டங்களை மட்டும் நாங்கள் குடும்பத்தோடு பார்த்தோம். அப்போது அப்பாவுக்குத் தெரியாத வீரர்களின் பெயர்களை நான்தான் சொல்வேன். ஏதாவது முக்கிய நிகழ்வுகளின்போது 'அது யார்?' என்று கேட்பார் அப்பா. உடனே நான் "இருங்கள் முகத்தைப் பார்த்து சொல்கிறேன்" என்பேன். அதற்குள் அருகில் இருக்கும் பாட்டி பெயரைச் சொல்லி விடுவார். எப்படி எனில், நான் ஒருமுறை பெயரைச் சொல்லும்போது அவ்வீரர் அணிந்திருக்கும் உடையின் எண்ணைக் (நம்பர்) கொண்டு கண்டு பிடித்து விடுவார். "இப்போதே இப்படி எனில் சின்ன வயதில் எப்படி இருந்திருப்பீங்க?" என்பேன் பாட்டியை. அவரும் பெருமையாக அதனைக் கருதுவார்!

- டி. வரதராஜன்,
திருவாரூர் மாவட்டம்.

இடம் இல்லை...

இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது ஒருநாள் வகுப்பாசிரியர் சிலேட்டில் 'சிட்டே, சிட்டே' பாடலையும், 'ஆத்திசூடி' பாடலையும் எழுதச் சொன்னார். எல்லோரும் எழுத ஆரம்பித்தோம். அரைமணி நேரம் கழிந்த நிலையில் ஒரு மாணவன் ஆசிரியரிடம் "ஸார் இடம் பத்தலை" என்றான். உடனே ஆசிரியர் அவனிடம், "சரி, நாற்காலியைத் தூக்கிட்டு வந்து என்கிட்ட உட்கார்ந்து எழுது" என்றார். அவனும் நாற்காலியை எடுத்துக் கொண்டு போய் ஆசிரியரின் அருகே உட்கார்ந்தான். சிறிது நேரம் கழித்து மீண்டும் அந்தப் பையன் கண்கள் கலங்க ஆசிரியரிடம் "ஐயா இடம் பத்தலை" என்றான். "என்னடா, இவ்வளவு இடம் இருக்கு... இதா பத்தலை உனக்கு" என்றார் கொஞ்சம் கோபமாய். அவன் அழுதபடியே "ஸார் ரெண்டு பாடல்களையும் எழுத சிலேட்டில் இடம் பத்தலை" என்றான். இதைக் கேட்டு எங்கள் ஆசிரியரும், நாங்களும் சிரித்து விட்டோம். "ரைட் போட்டுத் தர்றேன்.



அதை அழிச்சிட்டு மீதியை எழுதிக் காட்டு" என அவனைச் சமாதானப்படுத்தினார் ஆசிரியர்.

- ப. ராமகிருஷ்ணன்,
காயக்காடு.

மறக்க முடியவில்லை...

லீவு

நான் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நேரம் அது. ஒரு மாணவன் அடிக்கடி ஏதாவது காரணம் சொல்லி லீவு போட்டுக் கொண்டே இருப்பான். 'தாத்தா இறந்துவிட்டார். பாட்டி இறந்துவிட்டார்' என்று சொல்லியே லீவு போடுவான்.

ஒருநாள் அதுபோல் லீவு போட்டுவிட்டு

நாட்டாமையா?"

அடுத்தநாள் ஸ்கூலுக்கு வந்தான். வகுப்பாசிரியர் காரணம் கேட்டதற்கு, "ஊருல பாட்டி இறந்துட்டாங்க" என்றான். "உனக்கு மொத்தம் எத்தனை பாட்டிடா?" என்றார் ஆசிரியர் சற்றே கோபமாக. அதற்கு அவன் தட்டுத்தடுமாறி, "இல்லை. இறந்தது எங்க பக்கத்து வீட்டுப் பாட்டி" என்று சமாளிக்கப் பார்த்தான்.

அதற்கு ஆசிரியர், "நீதான் உங்க ஊருக்கு நாட்டாமையா? யார் செத்தாலும் கண்டிப்பா போயே ஆகணுமா?" என்றார் நக்கலுடன். இதைக் கேட்டதும் எல்லா மாணவர்களுக்கும் சிரிப்பை அடக்க வெகு நேரமாயிற்று.

- ஆர்.பி. ஜெயச்சந்திரன்,
பூனாம்பாளையம்.

என்ன விசேஷம்?

சமீபத்தில் எங்கள் மாமா ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதைப் பிரித்து எங்கள் அம்மா படித்துக் கொண்டிருந்தார். அப்போது வந்த எங்கள் அப்பா, "யாரிடமிருந்து லெட்டர் வந்திருக்கு?" என்று என் தங்கை மினுவிடம் கேட்டார்.

அவளும் பதில் கூற, எங்கள் அப்பா, "ரொம்ப நாள் கழிச்சு உங்க மாமா லெட்டர் போட்டிருக்காரே, லெட்டர்ல ஏதாவது விசேஷமா?" என்று கேட்டார்.

உடனே மினு, "இல்லைப்பா. லெட்டர்ல எதுவும் விசேஷமில்லை. வழக்கமான இன்லேண்ட் லெட்டர்தான்!" என்று கூற, அனைவரும் கடிதத்தைப் படிப்பதை நிறுத்திவிட்டுச் சிரித்தோம்.



- எம். வினோத்,
சங்கரன்கோவில்.

வாக்கு...

என் சித்தி மகளின் பெயர் ஆக்னஸ் ஷைனி. திருச்சியில் இருக்கும் அவள் நன்றாகப் பேசுவாள். கோடை விடுமுறைக்கு நாங்கள் அனைவரும் என் பாட்டியின் ஊருக்குச் சென்றிருந்தோம். எனது மூன்று சித்திகளும் அங்கு வந்திருந்தனர். எங்கள் உறவினர்கள் அவளிடம் "திருவிழாவுக்கு ஊருக்கு வந்துவிடு" என்றனர். அதற்கு அவள் "இதை முன்பே சொல்லக் கூடாதா? நான் சித்தி வீட்டுக்கு வருவதாக வாக்குக் கொடுத்து விட்டேனே!" என்றாள். இப்பொழுது தான் முதல் வகுப்பு போகப் போகும் அவள் இப்படி கூறியதும் நாங்கள் அதை ரசித்துச் சிரித்தோம்.



- பா. மேரிஜெயசீலி,
எட்டாம் வகுப்பு,
புனித மரியன்னை மெட்ரிகுலேசன் பள்ளி,
மேட்டூர் அணை.





முதல் கிறிஸ்துமஸ் கார்டு 1843-ல் சர் ஹென்றி ஹோல் என்ற பிரிட்டிஷ்காரர் கூறிய அடிப்படையில் ஜே.சி. ஹார்ஸ்லி என்பவரால் வடிவமைக்கப்பட்டது. லண்டனில் 1000 கார்டுகள் விற்கப்பட்டன.

சர் பிரான்சிஸ் என்பவர் தேவாலயங்களில் பாடப்படும் 'கிறிஸ்துமஸ் கரோல்' களை அறிமுகப்படுத்தினார்.



உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் 34-36 மில்லியன் கிறிஸ்துமஸ் மரங்கள் உருவாக்கப்படுகின்றன.

முதல் கிறிஸ்துமஸ் ஸ்டாம்ப் 1898ல் கனடாவில் வெளியிடப்பட்டது.

கிறிஸ்து மறைந்து 200 ஆண்டுகளுக்குப் பிறகே அவரது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் தொடங்கின.

கிறிஸ்துமஸ் துளிகள்...













11 ஆண்டுகள்...
9 நாடுகள்....
2500 பயிற்சி மையங்கள்...
25,00,000 மாணவர்கள்
ஓர் அறிவுப் புரட்சியை நோக்கி
5 - 13 வயது குழந்தைகளின் முழுமையான மூளை வளர்ச்சிக்கு சர்வதேச தரத்தில் ஒரு பயிற்சி!
அலோஹா
ALOHA™
MENTAL ARITHMETIC
(ABACUS LEARNING OF HIGHER ARITHMETIC)
கணிதத்தில் வல்லமை பெறுங்கள்!
கம்ப்யூட்டருக்கே சவால் விடுங்கள்!
Mr. Jayapal - Father of Indumathi
(DAV, Gopalapuram)
This is definitely a very useful program, I can feel the overall improvement and in specific Mathematical skills.
Mrs. Jayashree - Mother of Rakshita
(Padma Seshadri, K.K. Nagar)
Most definitely I can see the improvement. More confident, fast and most important accurate.
Mrs. Srinivasan - Mother of Dhivya,
Teacher in a leading CBSE School
She does the calculations quicker with lot of interest and also enjoys the challenge.
Mrs. Pushpa Kannan - Mother of 6 year old achiever Athul
(Jawahar Vidyalaya, Ashok Nagar)
Aloha increased Athul's Listening and Mental skills. There is also a good improvement in his Visualization powers.
★ வாரத்தில் 2 மணி நேர பயிற்சி
★ கணிதம் மட்டுமின்றி எல்லா பாடம் /துறைகளிலும் முதன்மை பெறலாம்.
★ 3வது மாதத்திலேயே பலனை அறியலாம்!
★ அறிவுத் திறன், அபார ஞாபக சக்தி, தன்னம்பிக்கை விரைவில் கணக்கிடும்முறை, குழந்தைகளின் கவனம், சிந்திக்கும் சக்தி, படிக்கும் பழக்கம், எழுதுவதில் வேகம் / துல்லியம் ஆகியவை உறுதியாக மேம்பட
• Around 105 Centres in India • 46 Centres in Chennai
Would you like to become an ALOHA Franchisee? CALL
ALOHA MENTAL ARITHMETIC INDIA (A Division of KK ACADEMY (P) LTD)
32, 1st Main Road, R.A. Puram, Chennai - 600 028. Phone : 24613262, 24616268 Fax : 52108090
E-mail : info@alohaindia.com Web : www.alohaindia.com

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka

